பக்கங்கள் – 16
விலை – ரூபா 50
Registered as a Newspaper
# உதயன்
சுடர்: 40
கதிர்: 22
புதன்கிழமை
18 டிசெம்பர் 2024
மார்கழி 03 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055
புதன்பொய்கை

## தங்கத்துக்கு கிராக்கி!

கொழும்பு, டிசெ. 18
இலங்கையில் அண்மைக்காலமாக தங்கத்தின் விலை தொடர்ந்தும் உயர்ந்த மட்டத்திலேயே காணப்படுகின்றது. ☞15

## நாடாளுமன்ற இணையத்தை தற்காலிகமாக முடக்குங்கள்!

கொழும்பு, டிசெ. 18
நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர் விவரங்கள் சரியாக உள்ளடக்கப்படும் வரையில் நாடாளுமன்ற இணையத்தளத்தை தற்காலிகமாகவேனும் முடக்கி வைக்குமாறு ☞15

## மாட்டின் உயிரை பறித்த மின்தூண்



யாழ்ப்பாணம், டிசெ. 18
யாழ்ப்பாணம் - தட்டாதெருச் சந்திப்பகுதியில், இரும்பு மின்கம்பத்தில் மின்னொழுக்கு ஏற்பட்டிருந்த நிலையில், மின்கம்பத்தில் படர்ந்திருந்த கொடியை மேய்வதற்காகச் சென்ற மாடு உயரமுத்த மின்சாரத்தால் தாக்கப்பட்டு சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளது.
யாழ்ப்பாணம் நகரசபையின் ஆளுகைக்கு ☞14

போரில் உயிரிழந்த

## உறவுகளுக்கு நினைவாலயம்

கொழும்பு, டிசெ. 18
இலங்கையில் இடம்பெற்ற போரில் கொல்லப்பட்ட உறவுகளை நினைவுகூருவதற்கு அங்கீகரிக்கப்பட்ட நினைவிடம் தேவை என்று நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவி ☞14

## புலிகளுக்கு நிதி சேகரிப்பு: சந்தேகநபருக்கு விடுதலை

கொழும்பு, டிசெ. 18
பிரிட்டனில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் மீளுருவாக்கத்துக்கு நிதி திரட்டிய குற்றச்சாட்டில் கடந்த 30ஆம் திகதி கைது செய்யப்பட்ட புலம்பெயர் தமிழரான ☞14

# முன்னாள் ஜனாதிபதிகளுக்கு முப்படைப் பாதுகாப்பு நீக்கம்

## அரசாங்கம் அதிரடி அறிவிப்பு

**கொழும்பு, டிசெம்பர் 18**



**முன்னாள் ஜனாதிபதிகளுக்குரிய முப்படைப் பாதுகாப்பு அடுத்த வாரம் முற்றாக நீக்கப்படும் எனவும், பொலிஸ் பாதுகாப்பு மாத்திரமே வழங்கப்படும் என்றும் அமைச்சர் ஆனந்த விஜேபால நேற்று அறிவித்துள்ளார்.** ☞15

சாவகச்சேரி நகரசபை

## கடைத்தொகுதி விவகாரம் மக்கள் நேற்றுப் போர்!

உள்ளூராட்சி ஆணையாளரின் தலையீட்டால் போராட்டம் முடிவுக்கு

யாழ்ப்பாணம், டிசெ. 18
சாவகச்சேரி நகராட்சி சபையால் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கடைத்தொகுதிகள் கேள்விமனுக்கோரல் மூலம் குத்தகைக்கு வழங்கப்படவிருந்த நிலையில், குறித்த கேள்விமனுப்பத்திரத்தை இடைநிறுத்தக் கோரி பிரதேச வர்த்தகர்களாலும் பொதுமக்களாலும் நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.
"2000ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் நாங்கள் இந்தக் ☞15

## அர்ச்சுனா எம்.பி.யின் பதவிக்குச் சிக்கல்?

நியதிகள் பின்பற்றப்படவில்லை என மேன்முறையீட்டு நீதிமன்றில் மனு!

கொழும்பு, டிசெ. 18
யாழ்ப்பாணம் மாவட்ட சுயேச்சை நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இரத்துச் செய்யுமாறுகோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
புதிய சுதந்திர முன்னணியின் தலைவர் ஓஷல ஹேரத் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார். அரச அதிகாரக் கட்டமைப்பில் செயற்பட்ட ஒருவர், நாடாளு ☞15

## புதிய சபாநாயகரானார் ஜகத் விக்கிரமரத்ன

கொழும்பு, டிசெ. 18
ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்தின் புதிய சபாநாயகராக மருத்துவக் கலாநிதி ஜகத் விக்கிரமரத்ன, வாக்கெடுப்பின்றி ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். ☞14

கணக்கறிக்கைகளை வழங்காத

## வேட்பாளர்கள் மீது சட்ட நடவடிக்கை!

கொழும்பு, டிசெ. 18
நாடாளுமன்றத் தேர்தல் செலவு அறிக்கைகளைச் சமர்ப்பிக்காத வேட்பாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.
நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட அனைத்து வேட்பாளர்கள், கட்சியின் செயலாளர்கள், ☞15

## கால்நடைகள் மூலமும் எலிக்காய்ச்சல் பரவல்?

ஆராய்வதற்குக் குழுவொன்று கொழும்பிலிருந்து வருகை

யாழ்ப்பாணம், டிசெ. 18
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கால்நடைகளுக்கு எலிக்காய்ச்சல் தொற்றியுள்ளதா, கால்நடைகள் மூலம் எலிக்காய்ச்சல் பரவுகின்றதா என்பது தொடர்பில் ஆராய்வதற்காக சிறப்புக் குழுவொன்று இன்று யாழ்ப்பாணம் ☞15

## தனியார் வகுப்புகளுக்கு வெள்ளி, ஞாயிறு தடை!

யாழ்ப்பாணம், டிசெ. 18
யாழ். மாவட்டத்தில் ஒன்பதாம் தரத்துக்கு உட்பட்ட தனியார் கல்வி வகுப்புகளை வெள்ளிக்கிழமை பிற்பகல் வேளைகளிலும், ஞாயிற்றுக்கிழமை முழு நேரமும் நிறுத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ☞15



முச்சந்தி முரளி


'தங்கத்துக்கு எங்கயும் எப்பவும் மவுசுதான் பாருங்கோ...'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின் கட்டணத்தை 11 வீதம் குறைக்கலாம்

கொழும்பு, டிசெ. 18
மின் கட்டணத்தை 11 வீதத்தால் குறைக்க முடியும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.
மின்னுற்பத்திக்காக பயன்படுத்தப்படும் எரிபொருளின் விலைகளையும் மேலும் குறைக்கமுடியும் என ஆணைக்குழுவால் தயாரிக்கப்பட்டுள்ள மாற்று யோசனையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
இலங்கை மின்சாரசபையால் சமர்ப்பிக்கப்பட்ட மின் கட்டணத் திருத்த யோசனை, பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் மின்னுற்பத்திக்காக வழங்கப்படும் எரிபொருளுக்கான விலை தொடர்பான அறிக்கை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்த பின்னர் குறித்த மாற்று யோசனை தயாரிக்கப்பட்டுள்ளது. எனினும் 2025ஆம் ஆண்டின் முதல் 6 மாதங்களுக்கு தற்போதுள்ள மின் கட்டணத்தை மாற்றமின்றி நடைமுறைப்படுத்த மின்சாரசபை தற்போது முன்மொழிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)



# மின்சாரசபையால் அதிக மின்துண்டிப்பு

## தவிக்கும் மக்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 18
**இந்த ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரை மின்சாரத் துண்டிப்புகள் வேகமாக அதிகரித்து வருவதாக மின்சாரம் பயன்படுத்துவோர் சங்கத்தின் தேசிய செயலாளர் சஞ்சீவ தம்மிக்க தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது- இலங்கை மின்சாரசபையின் தரவுகளின்படி 2023 ஆம் ஆண்டுக்குள் உரிய நேரத்தில் பணம் செலுத்தாமையால் 9 இலட்சத்து 70,933மின்சாரத் துண்டிப்புகள் ஏற்பட்டுள்ளன.
2024ஆம் ஆண்டின் ஜனவரி முதல் ஜூன் வரை 6,28,286 மின்சாரத் துண்டிப்புகள் செய்யப்பட்டுள்ளதாகவும், 505,949 வீடுகள், 8,579 தொழிற்சாலைகள், 2,090 வழிபாட்டுத் தலங்கள், 39 ஹோட்டல்கள், 359 பொதுத் துறை நிறுவனங்கள், கடைகள் மற்றும் 111,276 மற்றவை அடங்குகிறது. மின்சாரச் சட்டத்தை மீறி இலங்கை மின்சாரசபை பெரும் இலாபம் ஈட்டியுள்ளது. எனினும் வாடிக்கையாளர் அடமானம் வைத்து கூட கட்டணங்களை செலுத்த வேண்டியுள்ளது. இறுதியில் அடகு வைத்த தங்கப் பொருட்களுக்கு வட்டி கட்ட வேண்டியுள்ளது என்றும் சுட்டிக்காட்டினார். (ச-இ)

# பட்டங்களால் சமூகப்பிளவு

கொழும்பு, டிசெ. 18
நாடாளுமன்ற உறுப்பினர்களை சபையில் அறிமுகப்படுத்தும் போது மருத்துவர், பேராசிரியர் போன்ற பட்டங்களைத் தவிர்க்கவேண்டும் எனவும் அது சமூகப் பிளவுக்கு வழி வகுக்கும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் திலித் ஜயவீர முன்மொழிந்துள்ளார்.
பல்வேறு தொழில்களில் இருந்து வரும் நாடாளுமன்ற உறப்பினர் சபையில் இருப்பதாகவும், அவர்கள் முன் பட்டங்களுடன் அவர்களை அறிமுகப்படுத்துவது தவிர்க்கப்பட வேண்டும்.
மருத்துவமனைகளுக்கு மருத்துவர் பொருத்தமானவர், பேராசிரியர் பல்கலைக்கழகங்களுக்கு பொருத்தமானவர். எனவே, சபையில் அவர்களின் தலைப்புகளைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும் என்றும் அவர் கூறினார். (ச-இ)

# தேசியப்பட்டியல் எம்.பி; நால்வர் உறுதியேற்பு

யாழ்ப்பாணம், டிசெ. 18
தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் உட்பட நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதி சபாநாயகர் முன்னிலையில் நேற்று சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.
நாடாளுமன்றம் நேற்று முற்பகல் பிரதி சபாநாயகர் மருத்துவக் கலாநிதி றிஸ்வி சாலி தலைமையில் கூடியது.
இதன்போதே ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் எம்.பிக்கள் மூவரும், சிலிண்டர் கூட்டணியின் தேசியப் பட்டியல் எம்.பி.யொருவரும் சத்தியப்பிரமாணம் செய்தனர்.
ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் மனோ கணேசன், சுஜீவ சேனசிங்க மற்றும் மொஹமட் இஸ்மைல் ஆகியோரும், சிலிண்டர் கூட்டணி சார்பில் பைசர் முஸ்தபாவும் உறுதியேற்றனர்.
முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளர் நிஷாம் காரியப்பர் மாத்திரம் சத்தியப்பிரமாணம் செய்யவேண்டியுள்ளது. (ச-44)

# பொலிஸ் நிலையம் காரைநகருக்கு வேண்டும்

யாழ்ப்பாணம், டிசெ. 18
காரைநகரில் பொலிஸ் நிலையம் ஒன்றை அமைக்குமாறு காரைநகர்பிரதேச செயலாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.
யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தின்போதே அவர் இதனைச் சுட்டிக்காட்டினார்.
காரைநகரில்பொலிஸாருக்கு என 4 பரப்புக் காணி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
குறித்த காணியில் பொலிஸார் தமது பொலிஸ் நிலையத்தினை அமைக்கலாம். ஆகவே இதுகுறித்து பொலிஸ் திணைக்களம் உரிய கவனம் செலுத்தி மக்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு துரிதமாக பொலிஸ் நிலையத்தை அமைக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார். (ச-125)

# இந்திய மீனவரை விடுவியுங்கள்!

## தமிழக முதல்வர் அநுரவுக்கு வலியுறுத்து

கொழும்பு, டிசெ. 18
இலங்கை சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழக கடற்றொழிலாளர்கள் தொடர்பில் சாதகமாக பரிசீலனை செய்யுமாறு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிடம் தமிழக முதல்வர் வலியுறுத்தியுள்ளார்.
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, இந்தியாவுக்கு உத்தியோக பூர்வ பயணத்தை மேற்கொண்டுள்ளார். இந்தநிலையிலேயே அவர் மேற்படி கோரிக்கையை விடுத்தார். (ச-இ)

# விலையேற்றங்களுக்கு இம்மாதத்துக்குள் தீர்வு

கொழும்பு, டிசெ. 18
சந்தையில் நிலவும் அரிசித் தட்டுப்பாட்டுக்கு இந்த வாரத்துக்குள் தீர்வு எட்டப்படும். இம்மாதத்துக்குள் இந்தியாவில் இருந்து 60 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்படும். பண்டிகைக் காலத்தில் ஒருசில அத்தியாவசிய பொருள்களின் விலைகள் குறைக்கப்படும் என வர்த்தகம், வாணிபம், உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.
திட்டமிட்ட வகையில் சந்தையில் அரிசித் தட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டது. அரிசி இறக்குமதிக்கு விதிக்கப்பட்டிருந்த வரையறைகள் தற்காலிகமாக நீக்கப்பட்டு இம்மாதம் 20 ஆம் திகதி வரை தனியார் துறையினர் அரிசி இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
இறக்குமதி செய்யப்பட்ட அரிசியில் 75 ஆயிரம் கிலோ கிராம் அரிசி பாவனைக்கு உகந்ததல்ல என்று கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து அவற்றை திருப்பி அனுப்ப அறிவுறுத்தப்பட்டுள்ளது. பண்டிகைக் காலத்தை முன்னிட்டு அத்தியாவசிய பொருள்களின் விலைகள் குறைக்கப்படும். எந்த உணவுப் பொருட்களுக்கும் தட்டுப்பாடு ஏற்படாது. என்றும் குறிப்பிட்டார். (ச-இ)




# வெளிநாட்டிலுள்ள இலங்கைப் பிரஜைகளுக்கு ஒன்லைனில் பிறப்புச் சான்றிதழ்

யாழ்ப்பாணம், டிசெ. 18
உலகின் 77 நாடுகளில் வசிக்கும் இலங்கைப் பிரஜைகளுக்கு, ஒன்லைன் மூலம் பிறப்புச் சான்றிதழை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை பதிவாளர் திணைக்களத்தின் பதிவாளர் நாயகம் விஜயசிங்க தெரிவித்துள்ளார். யாழ். மாவட்டத்துக்கு விஜயம் மேற்கொண்டு பதிவாளர்களை சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார் அவர் மேலும் தெரிவிக்கையில்,
பிறப்பு, இறப்பு விவாகரத்து தொடர்பாக டிஜிற்றல் வடிவங்களில் வழங்குவதற்கு நாங்கள் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றோம். மேலும் இலங்கையில் காணாமல் போனவர் தொடர்பாக பதிவுகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. நாட்டுக்குத் தேவையான ஆவணங்களையும் நாங்கள் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-25,125)

# இறந்து ஒதுங்கிய திமிங்கிலம்

கொழும்பு, டிசெ. 18
கொழும்பு பம்பலப்பிட்டி கடற்கரையில் இறந்த திமிங்கலம் ஒன்று கரையொதுங்கியுள்ளது.
பம்பலப்பிட்டி புகையிரத நிலையத்துக்கு அருகில் உள்ள கடற்கரையில் திமிங்கலம் நேற்றுமுன்தினம் கரை ஒதுங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்த வருடத்தில்

# 829 திட்டங்கள் யாழில் நிறைவு

**யாழ்ப்பாணம், டிசெ. 18**

**யாழ்ப்பாண மாவட்டத்தில் இந்த வருடம் இதுவரையான காலப்பகுதியில் பன்முகப்படுத்தபட்ட வரவு - செலவுத்திட்டத்தின் கீழ் 826 திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட செயலகம் தெரிவித்துள்ளது.**

மாவட்டத்துக்கான ஒதுக்கீடாக 322 மில்லியன் ரூபா கிடைக்கப்பெற்ற நிலையில் அதற்காக 829 திட்டங்கள் அட்டவணையிடப்பட்டிருந்தன. இதன் பிரகாரம் டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

மேலும் முடிவுறுத்தப்பட்ட திட்டங்களின் பௌதீக வீதம் 99.6 சதவிகிதமாகவும் , இதுவரையான செலவீனம் 302.82 மில்லியனாகவும், செலவீன வீதம் 94.1 சதவிகிதமாகவும் காணப்படுகின்றது.

இதேவேளை யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு என நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட விசேட நிதி சில பிரதேச செயலகங்களில் நிறைவுறுத்தப்படாத காரணத்தால் நடைபெற்ற தேர்தலை அடிப்படையாகக் கொண்டு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கடந்த மாதம் மீளப்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது . (ச-125)

## உப்பு உற்பத்தி வீழ்ச்சி

கொழும்பு,டிசெ.18

அண்மையில் பெய்த கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக உப்பு உற்பத்தி கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இருபதாயிரம் குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக உப்பு உற்பத்தியாளர் சங்கத் தலைவர் ரமீஸ் பதுர்தீன் தெரிவித்துள்ளார். (ச-33-6)




## இந்திய வர்த்தகர்களுக்கு ஜனாதிபதி அநுர அழைப்பு

கொழும்பு, டிசெ. 18

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இந்தியா சென்றுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க புதுடில்லியில் இந்திய முன்னணி வர்த்தகப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடலில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஈடுபட்டார்.

இதில் இலங்கையில் முதலீடு செய்வதற்கான சாதகமான சூழல் குறித்து விளக்கமளித்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, இலங்கையில் முதலீடு செய்யுமாறு இந்திய தொழில் முனைவோரிடம் கோரிக்கை விடுத்தார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான முதலீடு மற்றும் வர்த்தக உறவுகளை விரிவுபடுத்தும் நோக்கில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் டிஜிற்றல் பொருளாதாரம், சுற்றுலா, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகிய துறைகள் குறித்தும் இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டது. (ச-இ)

## சுனாமி எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 18

பசுபிக் கடலில் வனுவாட்டு தீவுக்கு அருகே ரிக்டர் அளவு கோலில் 7.4 ஆக சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஒன்று ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த நிலையில் சுற்றியுள்ள தீவுகள் மற்றும் நியூஸிலாந் துக்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக வெளி நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ச-இ)





## யானையுடன் மோதி கூலர் விபத்து

வவுனியா, டிசெ. 18

யானையொன்றுடன் கூலர்ரக வாகனம் மோதியதில் ஒருவர் சிறுகாயங்களுக்கு உள்ளான நிலையில் வாகனத்தில் அடிபட்ட யானை பலத்த காயங்களுக்குள்ளாகியுள்ளது. நேற்றுமுன்தினம் இரவு மன்னார் பகுதியில் இருந்து மதவாச்சிநோக்கி மீன்களை ஏற்றிச்சென்ற கூலர்ரக வாகனம் பிரதான வீதியில் நின்றிருந்த காட்டு யானையுடன் மோதியுள்ளது. இதில் வாகனம் பலத்த சேதமடைந்துள்ளதுடன் அதில் பயணித்த ஒருவர் சிறு காயங்களுக்கு உள்ளானார். வாகனத்தில் அடிபட்ட யானைக்கு பலத்த காயம் ஏற்பட்ட நிலையில் வனஜீவராசிகள் திணைக்கள மருத்துவர்களால் அதற்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. (ச-110)




‘ஆறு கடக்கும் வரைதான் அண்ணன் தம்பி, அதுக்குப் பிறகு நீ ஆரோ நான் ஆரோ’ எண்டமாதிரித்தான் எங்கட தமிழ் அரசியல்வாதிமார் நடந்து கொள்ளுறவை. தங்களுக்குத் தேவையெண்டவுடன கட்சிக்குள்ள தங்களுக்கு எதிரான ஆக்களோடையும், மற்றக்கட்சிக் காரரோடையும் போய் ஒட்டுவினம். அலுவல் முடிஞ்சவுடன அவையை விட்டிட்டு இவை மட்டும் தனித்தவில் வாசிக்கத் தொடங்கிடுவினம். முக்கியமா எலக்சன் காலங்களில இப்பிடி வாக்குக்காக கூட்டணி வைக்கிறதும், அது முடிஞ்ச பிறகு கூட்டணி வைச்சவையையே கிழிச்சுத் தொங்கவிடுறதும் எங்கட ஆக்களுக்குப் புதிசில்லை. ஆனால் இப்பிடித் தேவைக்காக ஒண்டாநிக்கிறதும், பிறகு தங்கட பவரைக் கூட்ட தனிச்சு நிக்கிறதும் திசைகாட்டியில எடுபடாது. அந்தக் கட்சி ஒரு இயக்கமா இருந்து, கட்சியானதால இப்பவும் அந்தக் கட்சிக்குள்ள கடும் கட்டுப்பாடுகள் இருக்கு. அதை மீறினால் ஆரெண்டும் பாக்காமல் வீட்டை கலைச்சுப் போடுவினம். சபாநாயகரா தெரிவானவரே போலியான கலாநிதிப் பட்டத்தை பாவிச்சவர் எண்டதுக்காக அவரின்ர பதவியையே பறிச்சுப் போட்டினம். அப்பிடிக்கொத்த கட்சிக்கு, எங்கட ஆக்கள் சிலர் கண்ணுக்க மண்ணைத் தூவிப்போட்டு விளையாட்டுக்காட்டினதால மேல்மட்டம் கடும் கொதிப்பில இருக்காம்,

கிட்டடியில கட்சியின்ர மேல்மட்டத்தில இருந்து ஒருத்தர் வந்து, யாழ்ப்பாணத்தில இருக்கிற திசைகாட்டிக்காரர் எல்லாருக்கும் ஒரு மீற்றிங் வைச்சிருக்கிறார். அந்த மீற்றிங்கில தான் இந்த விசயம் கடுமையாக் கதைபட்டிருக்கு. வீட்டுக்கட்சியின்ர சட்டம்பியாரோட பின்னுக்கும் முன்னுக்கும் திரிஞ்ச ஒருத்தர், கடைசி நேரத்தில் திசைகாட்டிப்பக்கம் வந்து எலக்சன் கேட்டு எம்.பி.யாகிட்டார். அவர் சட்டம்பியாரிட்ட பழகின சில விசயங்களை தானும் செய்யப்பார்த்திருக்கிறார். “வெள்ளப் பாதிப்பை பாத்திட்டு வாறன்” எண்டு கட்சிக்கு சொல்லிப்போட்டு, இரகசியமா தன்ர பக்கத்துக்கு ஆக்களைச் சேர்த்துக் கொண்டு திரியிறாராம். கிட்டடியில அவர் கிளிநொச்சிப் பக்கம் வெள்ளம் பாக்கவெண்டு போய், அங்கையுள்ள சிலரைக் கூப்பிட்டு கூட்டம் வைச்சிருக்கிறார். அந்தக் கூட்டத்துக்கு வந்தவையில இருந்து இனி நடக்கப்போற பிரதேசசபை எலக்சனில போட்டி போடுறதுக்கான ஆக்களின்ர பேர் விவரத்தை தன்ரபாட்டில இந்த எம்.பி. எடுத்திருக்கிறார். ஆனால் அதெல்லாம் கட்சிதான் செய்யிற விசயம். அது தெரிஞ்சும், இப்பிடி தன்ர ஆக்களை எடுத்து அவையை உள்ளுக்க நுழைச்சு, தன்ர பவரைக் கட்சிக்குள்ள கூட்டலாம் எண்டது எம்.பி.யின்ர திட்டம் போல. உந்தப்பருப்பு வீட்டுக்கட்சிக்குள்ள அவியும், ஆனால் திசைகாட்டியில தேறிப்போடும்.

இப்பிடி கட்சிக்கு தெரியாமல், வெள்ளம் பாக்கப் போறன் எண்டு பேய்க்காட்டி, ஆள்பிடி வேலையில எம்.பி. இறங்கினதுக்கு கட்சியின்ர மேல்மட்டக்காரரும், மாவட்டத்தின்ர பெரியவரும் கடுமையாப் பேசிப்போட்டினமாம்.

“இப்பிடி நடந்தால் உம்மை பதவி விலக வைச்சிட்டு வேற ஆக்களைத்தான் அந்த இடத்துக்குப் போடவேண்டி வரும்” எண்டும் டோஸ் குடுத்தவையாம்.

அந்த எம்.பி. “நான் தெரியாமல் செய்துபோட்டன்” எண்டு மேல்மட்டக்காரரிட்ட மன்னிப்புக்கேக்க போக, அவரோ தான் கதைக்க ரெடியில்லை எண்டு கையால சிக்னல் காட்டிப்போட்டு வெளிக்கிட்டுட்டார். வீட்டுப்பழக்கம் திசைகாட்டிவரை போனால் இப்பிடித்தான்.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புங்குடுதீவு மருத்துவமனையில் திடீரெனத் தீ விபத்து!

புங்குடுதீவு, டிசெ. 18

புங்குடுதீவு மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை திடீரென தீ விபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மருத்துவமனை விடுதியில் பொருத்தப்பட்டிருந்த குளிரூட்டி திடீரென தீப் பற்றியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளது.

அங்கிருந்தவர்கள் விரைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். எனினும் அங்கிருந்த பரிசோதனைக் கட்டில், மெத்தை மற்றும் ஸ்கான் இயந்திரம் என்பன தீயில் எரிந்து சேதமடைந்துள்ளன. (ச-22,9,25)


# கசிப்புடன் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், டிசெ.18

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம் பகுதியில் வைத்து கசிப்புடன் 21 வயதுடைய சந்தேகநபர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. அவரிடமிருந்து 3 போத்தல் கசிப்பு மீட்கப்பட்டது. சந்தேகநபரைகடந்ததிங்கட்கிழமை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தியவேளை, பிணையில் செல்வதற்கு நீதிவான் அனுமதியளித்தார். (ச-22,27)


# புளியின் விலை உயர்வு



கொழும்பு, டிசெ.18

நாட்டில் ஒரு கிலோ கிராம் புளியின் மொத்த விற்பனை விலை ஆயிரம் ரூபா வரையில் அதிகரித்துள்ளதாக வர்த்தக நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சந்தைக்கு போதியளவு புளி கிடைக்கப் பெறாத காரணத்தாலேயே விலை அதிகரிப்பு பதிவாகி உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ச-45)



# வானில் பறந்த சைக்கிள்

யாழ்ப்பாணம், டிசெ. 18

இளைஞர்கள் ஏற்றிய பட்டத்துடன் சேர்ந்து சைக்கிளும் வானத்தில் பறந்த சம்பவம் வல்வெட்டித்துறை கம்பர்மலைப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நிகழ்ந்துள்ளது.

குறித்த பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் சிலர் வழமைபோன்று பட்டம் ஏற்றியுள்ளனர்.

இதன்போது அந்தப் பட்டத்தின் வால் பகுதியில் சிக்கிக்கொண்ட துவிச்சக்கர வண்டி ஒன்று பட்டத்துடன் வானத்தில் பறந்துள்ளது.

இதனை அந்தப் பகுதி மக்கள் வியப்புடன் கண்டுகளித்தனர். (ச-22,100)

# கிளிநொச்சிக்கு ரஷ்யாவின் உரம்

கிளிநொச்சி, டிசெ. 18

உலக உணவுத்திட்டத்தின் கீழ் ரஷ்ய அரசாங்கத்தினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட உரம் கிளிநொச்சி விவசாயிகளுக்கு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பகிர்ந்தளிக்கப்பட்டது.

நீர்ப்பாசன காணிகளுக்கு ஒரு ஏக்கருக்கு 12 கிலோ வீதமும், மானாவாரி காணிகளுக்கு ஒரு ஏக்கருக்கு 10 கிலோ வீதமும் குறித்த உரம் வழங்கப்பட்டது. அதேவேளை பூநகரி கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட 5000க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு இந்த உரம் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-22,113)



# கோலப்போட்டி

யாழ்ப்பாணம் , டிசெ. 18

வடலியடைப்பு கலைவாணி கலை மன்றத்தால், வடலியடைப்பு கலைவாணி கலை மன்ற ஸ்தாபக தினத்தை முன்னிட்டு கோலப் போட்டி எதிர்வரும் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு கலைவாணி கலை அரங்கத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பிரிவு -1 முன்பள்ளி மாணவர்கள் ,பிரிவு - 2இல் தரம் -1,2 மாண வர்களும்,பிரிவு -3இல் தரம் - 3,4,5 மாணவர்களும்,பிரிவு -4 இல் தரம் - 6,7,8 மாணவர்களும்,பிரிவு- 5இல் தரம் - 9,10,11 மாணவர்களும் ,பிரிவு - 6 இல் தரம் 12,13 மாணவர்களும் உள்ளடக்கப்பட்டுள்ளனர். (ச-22-125)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வழக்கமான காரியங்களிலும் கூடுதல் கவனம் தேவை. கணவன் மனைவிக்கிடையே வீண் வாக்குவாதம் ஏற்படக்கூடும். ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது.

**இடபம்:** உற்சாகமான நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணையின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்ச்சி அடைவீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும்.

**மிதுனம்:** சிலருக்கு சகோதர வகையில் எதிர்பாராத ஆதாயம் கிடைக்கும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். வாழ்க்கைத்துணைவழி உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**கடகம்:** உற்சாகமான நாள். எதிர்பாராத பணவரவு உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும். சிலருக்குக் குடும்பத்துடன் குலதெய்வக் கோயிலுக்குச் சென்று வேண்டுதலை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகம் ஏற்படும்.

**சிம்மம்:** பொறுமையைக் கடைப்பிடிக்கவும். அலுவலகத்தில் வழக்கமான நிலையே காணப்படும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் எதிர்பார்த்தபடி இருந்தாலும், சக வியாபாரிகளால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பொறுமை அவசியம்.

**கன்னி:** சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் பொருள் சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு. வாழ்க்கைத்துணை உங்கள் தேவையறிந்து பண உதவி செய்வார். சிலருக்கு உறவினர் வீட்டு விருந்து விசேஷங்களில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும்.

**துலாம்:** புதிய முயற்சியைத் தவிர்க்கவும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் தடை, தாமதம் ஏற்படக்கூடும். சகோதரர்கள் உதவி கேட்டு நச்சரிப்பார்கள். கொடுத்த கடனில் ஒரு பகுதி திரும்பக் கிடைக்கும்.

**விருச்சிகம் :** தேவையான பணம் கையில் இருப்பதால், செலவுகளை சமாளித்து விடுவீர்கள். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். சிலருக்கு வெளியூரில் இருக்கும் கோயில்களுக்குச் சென்று வழிபடும் வாய்ப்பு ஏற்படக்கூடும்.

**தனுசு:** இன்று எதிலும் பொறுமையாக இருப்பது நல்லது. திடீர்ச் செலவுகளால் கடன் வாங்க நேரிடும். பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும், அவர்களை விட்டுப்பிடித்துச் செல்வது நல்லது. சிலருக்கு வாழ்க்கைத்துணையால் செலவுகள் ஏற்படக்கூடும்.

**மகரம்:** மகிழ்ச்சி தரும் நாளாக இருக்கும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணையின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்வீர்கள். பிற்பகலுக்கு மேல் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**கும்பம்:** எதிர்பாராத பணவரவு உண்டாகும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதகமாக முடியும். உறவினர் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதர வகையில் சுபச்செலவுகள் ஏற்படக்கூடும்.

**மீனம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாளாக இருக்கும். குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பும் சிலருக்கு ஏற்படக்கூடும். பயணத்தின்போது கொண்டு செல்லும் பொருள்களை கவனமாகப் பார்த்துக்கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சிங்களக் கற்கைநெறிக்கு சான்றிதழ்கள் வழங்கல்

யாழ்ப்பாணம், டிசெ.18
சூரிய நிறுவகத்தினால் நடத்தப்படும், இரண்டாம் மொழி சிங்களக் கற்கைநெறியை பூர்த்திசெய்த யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் சுது மலைப் பகுதியில் அமைந்துள்ள தனியார் மண்டபம் ஒன்றில் நடைபெற்றது.

சூரிய நிறுவகத்தின் வடக்கு மாகாண இணைப்பாளர் தே.பிரேமராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பிரதம அதிதியாக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினர்களாக இலங்கைக்கான சுவிட்சர்லாந்து தூதரகத்தின் பிரதித் தூதுவர் ஒலிவர் ப்ராஷ், நாடாளுமன்ற முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, சப்ரகமுவ மாகாணத்தின் முன்னாள் ஆளுநர் நவின் திஸாநாயக்க, கௌரவ விருந்தினராக யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (ச-27)

# தொற்றாநோய்களைக் கண்டறிய பரிசோதனைகள் மிக அவசியம்!

### மருத்துவ நிபுணர் பேரானந்தராஜா தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், டிசெ. 18**

**தொற்றாநோய்களைக் கண்டறிய 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் இரத்தப் பரிசோதனையும், இரத்த அழுத்தப் பரிசோதனையும் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு தடவையாவது மேற்கொள்ளவேண்டும் என்று யாழ்.போதனா மருத்துவமனையின் மருத்துவ நிபுணர் பேரானந்தராஜா தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், மனிதனின் வாழ்வில் நோய்களானது இரண்டு வகையாக ஆதிக்கம் செலுத்துகிறது. அவை தொற்று நோய்கள் மற்றும் தொற்றாநோய்கள் என வகைப்படும்.

நீரிழிவு, இரத்த அழுத்தம், கொழுப்புத் தன்மையுள்ள நோய்கள் போன்ற தொற்றா நோய்களைக் கண்டறிய 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் இரத்தப் பரிசோதனை, இரத்த அழுத்தப் பரிசோதனை ஆகியவற்றைக் குறைந்தது மூன்று ஆண்டுகளுக்கு ஒரு தடவையாவது கண்டிப்பாக மேற்கொள்வது சிறந்தது.


மனித வாழ்வில் தொற்றா நோய்களைத் தவிர்க்க சீரான உடற்பயிற்சி, ஆறு மணித்தியாலங்களுக்குக் குறையாத வகையில் ஆழ்ந்த நித்திரை, விரதமிருத்தல், அமைதியான சூழலில் மனதை ஒருமுகப்படுத்தித் தியானம் இருத்தல், தன்னைத் தானே நேசித்தல், மற்றவர்களை விரும்புதல், மன்னிக்கப் பழகுதல் மற்றும் தேவையற்ற விடயங்களை மறத்தல், சிரித்தல், மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளைப் போதிய அளவு உண்ணுதல், கூழ், களி மற்றும் கஞ்சி வகைகள் போன்ற இயற்கை உணவு வகைகளை உண்ணுதல், தசை மற்றும் எலும்பு வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு சூரியஒளியில் நிற்றல் குறிப்பாக முற்பகல் 10 மணிக்கும் 11 மணிக்குமிடையில் சூரிய ஒளியில் நிற்பதால் விற்றமின் டி சத்துக் கிடைக்கும், போதியளவு குடிநீர் அருந்துதல், நேர காலத்துக்கு உண்ணுதல், நல்ல நண்பர்களுடன் பழகுதல் ஆகிய 15 விடயங்களைக் கடைப்பிடித்தால் மனிதன் ஆரோக்கியமாக வாழலாம் - என்றார். (ச-66)

## சி.சி.ரி.வி.களைக் கண்காணித்து நடவடிக்கை எடுங்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 18
வீதிகளில் குப்பை கொட்டுவோரை தடுக்க சி.சி.ரி.வி. கமராக்களின் கண்காணிப்பிலும் மாநகரசபை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்.மாநகர சபையால் காக்கைதீவு மீள்சுழற்சி மையத்துக்கு அண்மையாக யாழ்ப்பாணம் பொன்னாலை வீதியில் குப்பைகொட்டுபவர்களை அவதானிப்பதற்காக சி.சி.ரி.வி. கமராக்கள் பொருத்தப்பட்டிருந்தன.

குறித்த பகுதியிலேயே அதிகளவான திண்மக்கழிவுகள் பொதுமக்களால் கொட்டப்படுவதை அவதானிக்க கூடியதாக இருக்கிறது. எனவே குறித்த விடயத்தில் மாநகரசபை அவதானிப்புகளை மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் மக்கள் குறிப்பிட்டனர். (ச-125)



சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கும் உணவகங்கள், சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினரால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு கடந்த வெள்ளிக்கிழமை சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. (ச-25, 9)





வல்லி ரேடேர்ஸ் பிறைவேட் நிறுவனத்தின் பங்களிப்புடன் சாவகச்சேரி கோயிற்குடியிருப்புப் பிரதேசத்தில் மெழுகுவர்த்தி உற்பத்திசெய்யும் பயிற்சி வகுப்பு கடந்த சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது. (ச-25, 8)

## கலைஞர்கள் சங்கம் அங்குரார்ப்பணம்

கிளிநொச்சி, டிசெ.18
கிளிநொச்சி மாவட்டத்தில் பல்வேறு துறைகளில் செயற்படும் கலைஞர்களை ஒன்றிணைத்து கிளிநொச்சி மாவட்ட கலைஞர் சங்கம் கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இதன்போது புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது. தலைவராக வி.தேவகுமார், செயலாளராக ஆ.செல்வராஜ், பொருளாளராக ந.தனேஸ்வரன் உள்ளிட்ட 9 பேர் நிர்வாக உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர். (ச-25, 113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருபூசை விழா

யாழ்ப்பாணம், டிசெ.18

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகச் சிவஸ்ரீ. பால.திருகுணானந்தக்குருக்கள் நடத்தும் வாராந்த திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவும், மாதந் தோறும் ஈழத்துச் சித்தர்கள் குருபூசை விழாத் தொடர் 6 தவத்திரு மார்க்கண்டு சுவாமிகள் குருபூசை விழாவும் நவாலி தெற்கு திரு வருள்மிகு ஸ்ரீ நாகராஜா ராஜேஸ்வரி அம்பாள் திருக்கோவில் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ஆன்மீக விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பா. தனபாலன் கலந்துகொள்ளவுள்ளார். நிகழ்வில் 'ஈழத்துச் சித்தர்களில் மார்க்கண்டு சுவாமிகள்' எனும் விடயப்பொருளில் பிரசங்கச்சுடர் இளஞ்சைவப்புலவர் க.கயிலைவாசனின் சொற்பொழிவும், இதிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-45)

# வெளிநாட்டு மோகத்தால் கல்வியை இழக்கக்கூடாது

## மாணவர்களுக்கு ஈ.சரவணபவன் அறிவுரை

**யாழ்ப்பாணம், டிசெ.18**

**வெளிநாட்டு மோகத்தால் கல்வியை இழந்துவிடக்கூடாது என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்துள்ளார். பன்முகப்படுத்தப்பட்ட நிதியொதுக்கீட்டின் கீழ் சுழிபுரத்தில் அமைக்கப்பட்ட இலவசக் கல்வி நிறுவனம் ஒன்றின் வகுப்பறைத் திறப்பு விழாவில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இப்போது மாணவர்கள் வெளிநாடு செல்ல வேண்டும் என்ற மனப்பாங்கைக் கொண்டுள்ளனர். வடக்கு, கிழக்குத் தமிழர்கள் வெளிநாடுகளுக்குப் பெரும்பாலும் அகதி அந்தஸ்த்துப் பெற்றே செல்கின்றனர். சிலர் உயர்கல்வியை நோக்காகக் கொண்டு வெளிநாடுகளுக்குச் செல்கின்றனர். முன்னைய காலங்களைப் போன்று இப்போது வெளிநாடுகள் புகலிடக் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்வதில்லை. வடக்கில் தேசிய மக்கள் சக்திக்குக் கிடைத்துள்ள வாக்குகள் சர்வதேசத்தில் தவறான புரிதலை ஏற்படுத்தியுள்ளமையும் அதற்கு ஒருகாரணம். மாணவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்ல விரும்பினால் தகுந்த வழிமுறைகள் ஊடாகச் செல்லுங்கள். கல்வியைப் பூர்த்தி செய்து உயர்கல்வியை நிறைவு செய்யவேண்டும். க.பொ.த. சாதாரணதர, உயர்தரப் பரீட்சை வரையான காலப்பகுதியிலேயே இணைப்பாடவிதானங்களில் ஈடுபடு முடியும்.



அந்தக்காலமே உங்களை அனைத்துத் துறைகளிலும் ஈடுபடுத்தக்கூடியகாலம். உயர்தரப் பரீட்சையின் பின்னர் நீங்கள் உங்களுக்கான விசேட துறைகளில் பயணிக்க வேண்டியிருக்கும். மாணவர் பருவத்தைச் சரியாகப் பயன்படுத்தி உங்களை முன்னேற்றிக்கொள்ள வேண்டும் - என்றார். (எ-125)

# பப்பாசிப் பயிர்ச்செய்கை கனமழையால் பாதிப்பு

வவுனியா, டிசெ.18

வவுனியா வடக்கு பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட 21 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 500 விவசாயிகளினுடைய பப்பாசிப் பயிர்ச்செய்கைகள் கனமழை காரணமாக முழுமையாகவும், பகுதியளவிலும் பாதிக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட விவசாயிகளின் கோரிக்கைக்கு அமைவாக, நயினாமடு, மதியாமடு, சன்னாசிபரந்தன் உள்ளிட்ட கிராமங்களில் பாதிக்கப்பட்ட பப்பாசித் தோட்டங்களை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேரடியாகச் சென்று பார்வையிட்டதுடன், விவசாயிகளுக்குரிய நட்ட ஈடுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு உரியதரப்பினர்களுடன் பேசுவதாகவும் தெரிவித்துள்ளார். அதேவேளை, பசுமை அக்ரோ பிறைவேட் லிமிட்டட் எனும் நிறுவனத்தால் விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தினூடாக ஒரு விவசாயிக்கு அரை ஏக்கர் வீதம், மொத்தம் 250 ஏக்கரில் பப்பாசி, மிளகாய் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி-45-246-110)

# 'அஸ்வெசும - 2' 15,140 பேர் உள்ளீர்ப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 18

அஸ்வெசும கொடுப்பனவின் இரண்டாம் கட்டத்துக்காக டிசம்பர் 9 ஆம் திகதி வரையில் 15 ஆயிரத்து 140 பயனாளிகள் விண்ணப்பித்துள்ளனர்.

முதலாம் கட்டத்தில் 17 ஆயிரத்து 629 பயனாளிகளின் விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டபோதும் டிசெம்பர் 15 ஆம் திகதிவரை இரண்டாம் கட்டம் நீடிப்பு செய்யப்பட்டிருந்தது.

இதேவேளை இரண்டாம் கட்டத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களின் கணிப்பீடு 2025 ஜனவரி இடம்பெறவுள்ளது. (ச-25, 125)

# தமிழ்மொழி விழா

யாழ்ப்பாணம், டிசெ.18


தென்மராட்சிக் கல்வி வலயத்தால் நடத்தப்படும் தமிழ்மொழித் தினவிழா தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜன் தலைமையில் சாவகச்சேரி சிவன் கோவிலுக்கு அருகாமையில் உள்ள கலாசார மண்டபத்தில் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது


நிகழ்வில் பிரதம விருந்தினராக துணுக்காய் வலயக்கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளர் து.ஜெயதேவன் பங்கேற்கவுள்ளார். (ச-45-159)

# திருவாசக சொற்பொழிவு

யாழ்ப்பாணம், டிசெ.18

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக வாராந்தத் திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர்-36 சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயப் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது. மாணிக்கவாசக சுவாமிகள் குரு வணக்கத்தைத் தொடர்ந்து சைவப்புலவர், பிரசங்க பூஷணம் க.கைலநாதன் 'மாணிக்கவாசகரும் திருப்பாண்டிப்பதிகமும்' எனும் விடயப்பொருளில் சொற்பொழிவும், இதிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ-45)



# வாகன ஊர்தி நடைபயண நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.18

வடமாகாண சுற்றுலாப் பணியகம் மற்றும் வடமாகாண அமைச்சின் ஏற்பாட்டில், 'சுற்றுலாவை மேம்படுத்தி எதிர்காலத்தில் மாற்றத்தை உருவாக்குவோம்' எனும் கருப்பொருளில் உலக சுற்றுலா தின கலை கலாசார வாகன ஊர்தி, நடைபயண நிகழ்வு யாழ். பொது நூலக முன்றலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமானது. நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண பிரதம செயலாளர் எல். இளங்கோவன் கலந்து கொண்டுநிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

நடை பயணம் யாழ். பொது நூலக முன்றலில் ஆரம்பமாகி அங்கிருந்து, யாழ். போதனா மருத்துவமனை வீதி, கே.கே.எஸ். வீதி ஊடாக சென்று யாழ். பண்ணை சுற்றுவட்டப் பகுதியில் நிறைவடைந்தது.

மேளதாள, நாதஸ்வர இசைகள், சிறுவர் நடனங்கள், கோலாட்டம், பொம்மலாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம் உள்ளிட்ட நிகழ்வுகள் நடைபெற்றதோடு, வாகனப் பவனியில் 1968 தொடக்கம் 2001ஆம் ஆண்டு காலப்பகுதி வரையான கார்கள், மோட்டார் சைக்கிள்கள், மாதிரி புகையிரத வண்டி என்பன ஈடுபட்டன.

நிகழ்வில் யாழ். மாவட்ட முன்னாள் செயலர் அ.சிவபாலசுந்தரன், வடமாகாண சுற்றுலாப் பணியகம், வடமாகாண அமைச்சின் உயர் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (எ-45-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



நாளொரு நல்வார்த்தை

தடைகள் உங்களை நிறுத்திவிடாது, நீங்கள் அதனுள் புகுந்து செயற்படும்போது.

– டிசிடெரியஸ் எராஸ்மஸ் –

# மோடி சொல்லும் மறைமுகச் செய்தி

அயல்நாடான இந்தியாவுக்கு தனது முதலாவது உத்தியோக பூர்வ பயணத்தை அநுரகுமார திஸாநாயக்க மேற்கொண்டிருக்கும் நிலையில், 'இலங்கையில் அரசமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும்' என்று வலியுறுத்தியிருக்கின்றார் இந்தியாவின் பிரதமர் நரேந்திர மோடி. அதுமட்டுமின்றி இலங்கைத் தமிழ்ச் சமூகத்தின் விருப்பங்களை இலங்கை அரசாங்கம் நிறைவேற்றும் என்ற நம்பிக்கையையும் அவர் வெளியிட்டிருக்கின்றார். இலங்கையில் அரசியலமைப்பு முழுமையாக நடைமுறைப்படுத்தப்படாத பின்னணியில் - 13 ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக நீக்கப்படும் என்று இலங்கை அரசாங்கத்தின் பக்கமிருந்து குரல்கள் எழுந்திருக்கும் வேளையில் - இந்தியப் பிரதமரிடம் இருந்து இந்த எதிர்பார்ப்பு வெளிக்கிளம்பியிருக்கின்றது.

இந்தியா கடந்த காலங்களில் இலங்கையுடன் மென்போக்கான வெளியுறவுக்கொள்கையையே பின்பற்றியிருந்தது. இறுதிப் போரின் பின்னர் தமிழ் மக்கள் தங்களுக்குரிய நீதிக்கான -தீர்வுக்கான நம்பிக்கையாக இந்தியாவைக் கருதினாலும், தமிழ் மக்களின் நம்பிக்கை பொய்க்கும்படியே இந்தியா கடந்த காலங்களில் செயற்பட்டிருந்தது. இறுதிப்போரின் பின்னர் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வுக்கு இலங்கை அரசாங்கங்களை உந்தித் தள்ளக்கூடிய சந்தர்ப்பங்களில் கூட இந்தியா அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை என்பது தமிழ் மக்களின் பொதுவான குற்றச்சாட்டு. இலங்கையைக் கடிவாளமிடுவதற்கே தமிழ் மக்களின் பிரச்சினை பயன்படுத்தப்பட்டதே தவிர, தமிழ் மக்களுக்கான தீர்வுக்கான போதிய அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டிருக்கவில்லை. இப்போது இலங்கையில் ஏற்பட்டிருக்கும் அரசியல் மாற்றம் இந்தியாவின் நகர்வுகளிலும் மாற்றத்தை ஏற்படுத்தவேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. சீனச் சார்புக் கொள்கையுடைய இடதுசாரிகளின் ஆட்சி இலங்கையில் அமைக்கப்பட்டிருக்கும் நிலையில், இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் - ஊடுருவல் அதிகரிக்கும் என்பது வெளிப்படையானது. இந்தநிலைமை தனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானது என்பதால் இலங்கையில் தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்த - அதிகரிக்க அனைத்தையும் செய்ய வேண்டிய நிலையில் இருக்கின்றது இந்தியா. அதனால் சாம, தான, பேத, தண்டம் எனப் பல வழிகளில் தனது முயற்சிகளை மேற்கொள்ள இந்தியா தயங்காது.

ஆட்சிக்கு வந்திருக்கும் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் இந்தியாவால் கொண்டுவரப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நீக்கும் நிலைப்பாட்டிலேயே இருக்கின்றது. தமிழ் மக்கள் விரும்பும் சமஷ்டி முறையிலான தீர்வை நிராகரிக்கும் இந்தப் புதிய அரசாங்கம், புதிய அரசமைப்பின் ஊடாகத் தமிழ் மக்களுக்குத் தீர்வு வழங்கப்படும் என்றும் கூறுகின்றது. இந்தப் பின்னணியில் இலங்கைத் தமிழ்ச் சமூகத்தின் விருப்பங்களை இலங்கை அரசாங்கம் நிறைவேற்றும் என்ற நரேந்திர மோடியின் நம்பிக்கை இலங்கை அரசாங்கத்துக்கு விடுக்கப்பட்டுள்ள மறைமுக எச்சரிக்கையாகவும் கொள்ளக்கூடியது. அநுரகுமார திஸாநாயக்க அரசாங்கம் திசைமாறிப் பயணித்தால், இந்தவிடயத்தில் ஆகக்கூடிய அழுத்தங்களைச் சந்திக்கநேரிடும் என்ற அர்த்தத்தையும் கொள்ளமுடியும்.

இந்தியாவின் கையைமீறி இலங்கை செயற்பட ஆரம்பித்தால் அதற்குக் கடிவாளமிட இந்தியா தமிழர் விடயத்தை நிச்சயம் கையிலெடுக்கும். இலங்கையில் எந்த அரசாங்கமும் அதீத பலத்துடன் ஆட்சிப்பீடமேறினாலும், சீனாவின் ஆதரவு இருந்தாலும் இந்தியாவைப் புறந்தள்ளிச் செயற்பட முடியாது என்பதே யதார்த்தம். தெற்காசிய நாடுகளை தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்வதில் அக்கறையுடைய இந்தியா, அநுரகுமார அரசாங்கம் பாம்பு போல படமெடுத்து ஆட ஒருபோதும் அனுமதிக்காது. இலங்கையில் அரசமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் - உறுதியளித்தபடி மாகாணசபைத் தேர்தல்களை நடத்தவேண்டும் என்ற இந்தியப் பிரதமரின் கருத்துகள் உணர்த்தும் செய்தியும் அதுவே. மீண்டும் தமிழ் மக்களுக்கான தீர்வு முன்னரங்குக்கு வந்துள்ளதள யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு, தமிழ் மக்களுக்கான தீர்வைப் பெற்றுக்கொள்வதில் தமிழ்த் தலைமைகள் என்ன செய்யப் போகின்றார்கள் என்பதுதான் மில்லியன் டொலர் கேள்வி.






## சதொசவால் நெல் கொள்வனவு

கொழும்பு, டிசெ. 18

எதிர்வரும் பெரும்போகத்தில் விவசாயிகளிடமிருந்து நியாயமான விலைக்கு சதொச ஊடாக நெல்லைக் கொள்வனவு செய்யவுள்ளதாக வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

நெல்லை மொத்த அரிசியாக மாற்றுவதற்கு அரசாங்கம் மத்தியஸ்தம் செய்யும் என்றும் இதன் மூலம் அரிசி சந்தையை சீரான முறையில் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (ச-இ)

## சீனியில் மோசடி சி.ஐ.டி.யில் பந்துல

கொழும்பு, டிசெ. 18

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபயவின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற 15.9 பில்லியன் ரூபா சீனி வரி குறித்த விசாரணைகள் தொடர்பில் அப்போதைய வர்த்தக அமைச்சராக இருந்த பந்துல குணவர்த்தன குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு நேற்றுமுன்தினம் அழைக்கப்பட்டார்.

குறித்த விடயம் தொடர்பில் பந்துல குணவர்த்தனவிடம் 4 மணி நேரம் விசாரணை நடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. (ச)



## டெங்கு 47,291

கொழும்பு, டிசெ. 18

நாட்டில் இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 47,291 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. (ச-இ)



## சஜித்தை பிரிந்தார் ஜகத்

கொழும்பு, டிசெ. 18

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஜகத் குமார அந்தக் கட்சியிலிருந்தும் விலகியுள்ளார்.

அண்மையில் கட்சியில் இணைந்துகொண்ட பிரதிநிதிகளுக்கு நீதி வழங்காமை உள்ளிட்ட பல்வேறு காரணங்களை முன்வைத்து தாம் ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து விலகுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)



## பல பொருள்களுக்கு கட்டுப்பாட்டு விலை

கொழும்பு, டிசெ. 18

பல அத்தியாவசிய பொருள்களுக்கு அதிகபட்ச சில்லறை விலை விதிக்கப்படும் என வர்த்தகம், உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார். நுகர்வோர் விவகார அதிகாரசபை அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். அந்தவகையில் குடிதண்ணீர் போத்தல்கள், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் உப்பு, பருப்பு, வெங்காயம், உருளைக் கிழங்கு, பல உணவுப் பொருள்கள், அரிசி, கொத்து உள்ளிட்ட பேக்கரி பொருள்கள் ஆகியவற்றுக்கே கட்டுப்பாட்டு விலை விதிக்கப்படவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிய வீட்டுடன் காணி விற்பனைக்கு

கே.கே.எஸ். வீதி, கொக்குவிலில் 1 பரப்புக் காணி சிறிய வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.

076 039 2163

(CS/29467) F-1

## பெயர் மாற்றம்

புத்துவெட்டுவான் துணுக்காய் முல்லைத்தீவில் வதியும் **செல்லத்துரை சிதம்பரனாதர்** ஆகிய நான் எனது பெயரை செல்லத்துரை சிதம்பரநாதன் என மாற்றம் செய்வதோடு இனி வரும் சகல ஆவணங்களிலும் **செல்லத்துரை சிதம்பரநாதன்** என்றே கையொப்பமிடுவேன் என்று இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்குத் தெரியப்படுத்துகின்றேன்.


(CR 43912) A-1

**செல்லத்துரை சிதம்பரநாதன்**

## 16ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் நல்லையா தவகுலசிங்கம் (தவம்)**

(முன்னாள் சீமெந்துக் கூட்டுத்தாபன உத்தியோகத்தர் - காங்கேசன்துறை, அக்ரோ இயந்திரவியல் தொழிலக உரிமையாளர்)



மலர்வு 25.02.1947 — உதிர்வு 16.12.2008

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
பிறரையும் வாழவைத்த எங்கள்
குலவிளக்கே!
ஆண்டுகள் பதினாறு ஆனதப்பா
ஆறவில்லை உங்கள் நினைவுகள்.

(CS/29466) J-1

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

பிறப்பு 21 . 04 . 1967



இறப்பு 12 . 12 . 2024

**ஐயாத்துரை மகாதேவன்**

ஒட்டுவெளி, மிருசுவிலைப் பிறப்பிடமாகவும், லண்டன் Eastham ஐ வதிவிடமாகவும் கொண்ட ஐயாத்துரை மகாதேவன் அவர்கள் கடந்த (12.12.2024) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை - மற்றும் சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சண்முகலிங்கம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சுபாஜினி அவர்களின் அன்புக் கணவரும், பவிஸ்ஜா, லதீசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரஞ்சிதமலர், ராகினி, தவசீலன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், பிரபாகரன், கிருசாந்தி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.12.2024) வியாழக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் 34 Aldersbrook Rd, Wanstead, London, E125DY மண்டபத்தில் இடம்பெற்று பி.ப 1:00 மணியளவில் City of London Cemetry யில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும்-ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தொடர்பு:-**
+44 784 524 6548 (சுபா)
077 612 8186 (தவா)
+44 753 347 3212 (துஷி)

தகவல்:
குடும்பத்தினர்

(CR/43904) J-1

# ஜனாதிபதி நிதியத்தில் இருந்து பணம் பெற்றோர் விவரம் வெளியீடு

கொழும்பு, டிசெ. 18

2005 தொடக்கம் 2024ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஜனாதிபதி நிதியத்தில் இருந்து ஒதுக்கப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பான தகவல்களை அமைச்சர்நளிந்த ஜயதிஸ்ஸ நேற்று வெளியிட்டார்.

இதன்படி முன்னாள் பிரதமர் தி.மு.ஜயரத்ன 3 கோடி ரூபாவரை இந்த நிதியைப் பெற்றுள்ளார் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பில் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ மேலும் தெரிவித்ததாவது:-

''ஜனாதிபதி நிதியத்தில் இருந்து 2005ஆம் ஆண்டு தொடக்கம் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் பணம் பெற்றுள்ளனர். வறுமைக்கு நிவாரணம் வழங்குதல் உள்ளிட்ட நலன்புரி நடவடிக்கைகளுக்காக இந்த நிதியத்தின் பணம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஜகத்குமார 10 லட்சம் ரூபாவும், கே.பி. எஸ்.குமாரசிறி 9 லட்சத்து 53 ஆயிரத்து 430 ரூபாவும், ஜயலத் ஜயவர்த்தன 10 லட்சம் ரூபாவும், நாமல் குணவர்த்தன 10 லட்சம் ரூபாவும், தர்மதாச பண்டா 10 லட்சம் ரூபாவும், விதுர விக்கிரமநாயக்க 15 லட்சம் ரூபாவும், விமலவீர திஸாநாயக்க 30 லட்சம் ரூபாவும், லக்கி ஜெயவர்த்தனே 16.2 லட்சம் ரூபாவும், பி. சந்திரசேகரன் 14 லட்சம் ரூபாவும், ஜோன் அமரதுங்க 40 லட்சம் ரூபாவும், ஜோசப் மைக்கல் பெரேரா 27 லட்சம் ரூபாவும், டி.பி.ஏக்கநாயக்க 48 லட்சம் ரூபாவும், டபிள்யூ.எம்.எஸ்.பொன்சேகா 55 லட்சம் ரூபாவும், ஜயந்த வீரசிங்க 90 லட்சம் ரூபாவும், எலிக் அலுவிஹாரே 22 லட்சம் ரூபாவும், ரஞ்சித் அலுவிஹாரே 8.6 லட்சம் ரூபாவும், ராஜித சேனாரத்ன 100 லட்சம் ரூபாவும், கெஹலிய ரம்புக்வெல 110 லட்சம் ரூபாவும், எம்.கே.ஏ.டி.எஸ்.குணவர்த்தன 112 லட்சம் ரூபாவும், ரஞ்சித் சொய்சா 188 லட்சம் ரூபாவும் இவ்வாறு பெற்றுள்ளனர்'' என்று வெளிப்படுத்தப்பட்டுள்ளது. (ம-இ)

# இந்தியாவில் பேசப்பட்டவற்றை அநுர பகிரங்கப்படுத்தவேண்டும்

## பெரமுன வலியுறுத்து



யாழ்ப்பாணம், டிசெ. 18

ஒற்றையாட்சி, புதிய அரசமைப்பு மற்றும் 13 ஆவது திருத்தச்சட்டம் என்பன தொடர்பில் இந்தியத் தரப்பில் தெரிவிக்கப்பட்ட கருத்துகள் என்னவென்பது குறித்து ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நாட்டு மக்களுக்குப் பகிரங்கப்படுத்த வேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதியின் இந்திய விஜயம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தனது முதலாவது வெளிநாட்டுப் பயணத்தை இந்தியாவுக்கு மேற்கொண்டமை மிகவும் நல்ல விடயமாகும். ஏனெனில் அன்று இந்திய எதிர்ப்புக் கொள்கையை கடைபிடித்துவந்த ஜே.வி.பி.யினர் இன்று ஆட்சிக்கு வந்த பிறகு அந்த நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டுள்ளனர்.

இந்தியாவில் பேசப்பட்ட விடயங்கள் என்னவென்பது தொடர்பில் நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி, நாடு திரும்பியகையோடு தெளிவுபடுத்தவேண்டும். இலங்கையில் சமஷ்டி முறைமையை ஏற்படுத்த இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும் என தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கடிதம் அனுப்பியுள்ளார்.

நல்லாட்சி (2015-2019) காலத்தில் முன்னெடுக்கப்பட்ட அரசமைப்புப் பணி இறுதிப்படுத்தப்படும் என தேசிய மக்கள் சக்தி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதியளித்துள்ளது. அந்த அரசமைப்பு ஒற்றையாட்சியை கைவிடும் வகையிலான அரசமைப்பாகும். இலங்கையின் ஒற்றையாட்சி, உத்தேச புதிய அரசமைப்பு அதேபோல புதிய அர சமைப்பு இயற்றப்படும்வரை அமுலில் இருக்கும் எனக் கூறப்பட்டுள்ள 13 ஆவது திருத்தச்சட்டத்தை அமுலாக்குவது தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன? இவை தொடர்பில் இந்தியத் தரப்பில் கூறப்பட்ட விடயங்கள் எவை. இது தொடர்பில் நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்-என்றார். (ச-44)

# வாகன பற்றரிகள் திருட்டு இருவர் வசமாக மாட்டினர்

வவுனியா நெளுக்குளம் பொலிஸ் பிரிவுக்குட் பட்ட வேப்பங்குளம் பகுதியில் உள்ள வாகன தரிப்பிடம் ஒன்றில் வாகன பற்றரிகளைக் களவாடி வந்த குற்றச்சாட்டில் இருவரை நெளுக்குளம் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

குறித்த வாகனத் தரிப்பிடத்தில் வாகன பற்றரிகள் களவாடப்படுவதாக நெளுக்குளம் பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டுக்கமைய நெளுக்குளம் பொலிஸார் இரகசிய விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன் போது நான்கு வாகனப் பற்றரிகளுடன் இரு சந்தேகநபர்களைக் கைது செய்துள்ளதுடன் குறித்த குற்றச்செயலுக்கு பயன்படுத்தப்பட்டது என சந்தேகிக்கப்படும் முச்சக்கரவண்டி ஒன்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-110,18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18.12.2024
புதன்கிழமை

புதன் பொய்கை

அறிவு, இரக்கம் மற்றும்
தைரியம் ஆகியவையே
உலகளவில்
அங்கீகரிக்கப்பட்ட
மனிதர்களுக்கான மூன்று
தார்மீக குணங்கள்.

- கன்பூசியஸ்



# கண்டல் தாவர அழிவு
## கரையோர இருப்பிழப்பு

திருச்செல்வம் ஜனனி
ஊடகக்கற்கைகள் துறை
மூன்றாம் வருடம்
யாழ். பல்கலைக்கழகம்

உலகில் ஏறத்தாழ 112 நாடுகளில் கண்டல் காடுகள் காணப்படுவதாக அறிக்கைகள் கூறுகின்றன. உலகில் காணப்படும் ஒட்டுமொத்த கண்டற் பரப்பில் வெறும் 0.1 சதவீதமான கண்டல் காடுகள் மாத்திரமே இலங்கையில் காணப்படுகின்றன. இவை மரங்களாகவும், செடிகளாகவும் மற்றும் ஒரு வித்திலைத் தாவரங்களாகவும் இனத்துக்கு இனம் வேறுபட்டுக் காணப்படுகின்றன. கண்டல் தாவரங்கள் உவர்நீர்ச் சூழலில் வளர்வனவாக இருந்தாலும் கழிமுகங்களிலும், கடனீரேரிகளில் கடல்நீர் உவர்ப்பை விடக் குறைந்த அளவிலான உவர்த்தன்மைகொண்ட நீர்ச் சூழலிலும் கூட செழித்து வளர்கின்றன.



கண்டல் தாவரங்கள் அழிந்துவரும் நாடுகளில் ஒன்றாக இலங்கையும் காணப்படுகின்ற நிலையில், அவற்றைப் பராமரிக்க வேண்டியதன் அவசியம் தொடர்பிலும், கண்டல் காடுகளில் பரப்பை அதிகரிக்கவேண்டியதன் அவசியம் தொடர்பிலும் பரப்புரை ரீதியாகவும் செயற்பாட்டு ரீதியாகவும் இயங்கிவரும் மன்னார் மாவட்ட மீனவரான யோகேஸ்வரன் அருள்நேசன் என்பவருடனான நேர் காணல் இது.

**கே: கண்டல் தாவரங்கள் இலங்கைக்கு ஏன் அவசியம் என்று கருதுகின்றீர்கள்?**

ப: கண்டல் தாவரங்கள் அழகூட்டும் தாவரங்கள் அல்ல. மாறாக அவை ஒரு தற்காப்பு அரண்கள். மண்ணரிப்பு, சுனாமி, வெள்ளப்பெருக்கு போன்ற இயற்கைச் சீற்றங்களின் பாதிப்பிலிருந்து கண்டல் தாவரங்களே கடலையும் கடற்கரையோரங்களையும் பாதுகாக்கின்றன. மேலும் இவை காற்றை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதுடன், சுத்திகரிக்கவும் செய்கின்றன. கடல்வாழ் விலங்குகள் மற்றும் பறவைகளுக்கு வாழிடங்களாகவும் காணப்படுகின்றன எனவே இவ்வாறான காரணங்களால் இலங்கை போன்ற தீவு நாடுகளுக்கு கண்டல் தாவரங்கள் மிக அவசியமானவை.

**கே: கண்டல் தாவரங்கள் தற்போது இலங்கையில் அதிகளவு வியாபித்திருக்கின்றனவா? அது தொடர்பான விழிப்புணர்வு மக்களிடம் உள்ளதா?**

ப: யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, அம்பாந்தோட்டை, மாத்தறை, காலி, களுத்துறை, கொழும்பு, கம்பஹா, புத்தளம், மன்னார் ஆகிய 14 கரையோர மாவட்டங்களில் இன்று கண்டல் காடுகள் வியாபித்துள்ளன. இலங்கையில் ஏறத்தாழ 6 ஆயிரம் ஹெக்டேயர் மட்டுமே கண்டல் காடுகள் உள்ளன எனக் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் அறிக்கை கூறுகின்றது. இலங்கையில் கண்டல் காடுகள் அதிகம் உள்ள மாவட்டமாக புத்தளம் காணப்படுகின்றது. அதற்கு அடுத்ததாக யாழ்ப்பாணம், மன்னார் போன்ற மாவட்டங்கள் காணப்படுகின்றன. உண்மையில் தற்போதுள்ள கண்டல் காடுகளின் எண்ணிக்கையை நாம் பல மடங்கு அதிகரிக்கவேண்டும்.

**கே: உலகில் பலவகையான கண்டல் தாவரவகைகள் காணப்படுகின்றன. இங்கு காணப்படுகின்ற தாவர இனங்களைக் கூறுவீர்களா?**

ப: கண்டல் தாவரங்களில் ஏராளமான வகைகள் உள்ளன. றைசோபோறாவில் இரு இனங்கள், சிறியொப்ஸ் வகையில் இரு இனங்கள், சொனறேசியாவில் மூன்று இனங்கள் என இந்தப் பட்டியல் நீட்சியுறும். இலங்கையில் அதிகமாக 'நிபா புறுட்டிகன்ஸ்', 'அக்றொஸ்ரிகம்', 'ஹெரற்றீரா', 'டொலிகோடேன்றோன்', 'செபராமங்கா', 'டெரிஸ்' போன்றவையும் காணப்படுகின்றன. ஏறத்தாழ 40 இனங்கள் மரங்களாகவும், பற்றைகளாகவும் காணப்படுகின்றன. இவற்றில் மன்னாரில் மட்டும், அவினீசியா, றைசப்போரா, நரிக்கிரி, ஏஜிசியஸ், தாகல் போன்ற எட்டு வகையான கண்டல் தாவரங்கள் உள்ளன.

**கே: கண்டல் தாவரங்கள் அழிவடையும் நாடுகளில் ஒன்றாக இலங்கை அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. எதற்காக இங்கு கண்டல் தாவரங்கள் அழிகின்றன?**

ப: கண்டல் தாவரங்கள் அழிவுக்கு முதலாவது காரணம் பல்வேறுபட்ட மனித நடவடிக்கைகளே. கண்டல் தாவரங்களை வெட்டியெடுத்து கடலுக்குள் கொண்டுசென்று பற்றையாக வைத்து மீன்களைக் கவர்ந்து மீன்பிடிக்கின்றனர். ஒருநேர மீன்பிடிக்காக கண்டல் தாவரங்களை அழிப்பது என்பது பெரும் மடமைத்தனம். அதைத்தான் பலரும் செய்து கொண்டிருக்கின்றனர்.

அத்துடன், நடுகை செய்யப்படும் கண்டல் தாவரங்கள் முறையான பராமரிப்பு இல்லாமலும் அழிந்து போகின்றன. சிலர் விறகுக்காகவும் இவற்றை வெட்டிச்செல்கின்றனர். கண்டல் தாவரங்களை வனவிலங்குகள் உண்பது குறைவு. மனிதர்கள்தான் கூடுதலாக அவற்றை அழிக்கின்றார்கள். போதிய அறிவற்ற அல்லது தெளிவற்ற நிலையைத்தான் இது காட்டுகின்றது.

**கே: கண்டல் தாவரங்களின் இதர பயன்கள் எவை?**

ப: கண்டல் தாவரங்கள் மீன் இனம் மற்றும் இறால் பெருக்கம், கால் நடைகளின் உணவு, கடற்கரை பாதுகாப்பு, கடல் வளங்களை பேணுதல், கடல் நீரை தூய்மையாக்குதல், கடல் வாழ் அங்கிகளுக்கான வாழ்விடமாதல், பசளை உற்பத்தி, பறவைகளின் புகலிடம், மண்ணரிப்பைத் தடுத்தல் என்பவற்றுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. அத்துடன், சூழலை மாசுபடுத்தும் காரணிகளை உறிஞ்சும் தன்மை உடையதாகக் காணப்படுகின்றன. றைசோபோறாவின் பட்டைகள் எலும்பு முறிவைக் குணப்படுத்தவும், தில்லை மரத்தின் பாலானது தோல் வியாதியைக் கட்டுப்படுத்தவும் பயன்படுத்தப்படுகின்றன. கண்டல் தாவரங்கள் மீனுக்கு உணவாகவும் பயன்படுத்தப்படுகின்றன. புரதம் நிறைந்த பெரிய பொலிக்கீற்றாக்கள் இங்கிருந்து பெறப்படுகின்றன. படகு கட்டவும், மீன்பிடி உபகரணங்கள் செய்யவும் கூட கண்டல் தாவரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. றைசோபோறா, சிரியோப்ஸ் போன்றவற்றில் இருந்து பெறப்படும் தளிர் வலைகளைச் சாயமிட உதவுகிறது.

கண்டல் தாவரங்களை தமது வாழ்விடங்களாக மீன்களும் பறவையினங்களும் கொண்டுள்ளன. இவை சுற்றுலாப் பயணிகளை கவர்கின்றன. மீன் குஞ்சுகள் வளரும் இடமாகவும் அவற்றிற்கு உணவளிக்கும் இடமாகவும் கண்டல் காடுகள் காணப்படுகின்றன.

**கே: இவை அழியாமல் பாதுகாப்பதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்?**

ப: கண்டல் தாவரங்கள் என்றால் என்ன அது எதற்காக கடற்கரையை அண்டிய பிரதேசங்களில் வளர்க்கப்படுகின்றன அதன் பயன்கள் என்ன என்பது நூற்றுக்கு தொண்ணூறு வீதமான மக்களுக்குத் தெரியாது. அவற்றை மக்களுக்குத் தெளிவுபடுத்தவேண்டும். கண்டல் தாவரங்களை வெட்டிக் கடலில் போட்டு மீன்பிடிப்பதை தவிர்க்க வேண்டும். அரசு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் யாராக இருந்தாலும் மக்களுக்கு இது சம்பந்தமான விழிப்புணர்வை கொடுப்பது அவசியம். கண்டல் தாவரங்களின் முக்கியத்துவம் தொடர்பாக கிராம மக்களுக்கு வீதி நாடகங்கள், கருத்தரங்குகள், குறுந்திரைப்படங்கள் ஆவணப்படங்கள் போன்றவற்றின் மூலம் புரிதலை ஏற்படுத்த முயற்சிக்கவேண்டும். கண்டல் தாவர நடுகையை ஊக்குவிப்பதோடு நடுகைசெய்தவற்றை பாதுகாக்கவும் வேண்டும்.

நிறைவாக...

கண்டல் தாவரங்கள் தொடர்பான விழிப்புணர்வு இலங்கையில் போதியளவு ஏற்படுத்தப்படவில்லை என்பது உண்மை. இன்று புவி வெப்பமாதல் உள்ளிட்ட காரணங்களால் நாளுக்குநாள் கடல்நீர் மட்டம் அதிகரித்து வருகின்றது. தீவு நாடுகளின் இருப்பு சந்தேகத்துக்கு உரியதொன்றாக மாறிவருகின்றது. இவ்வாறானதொரு பின்னணியில் கண்டல் காடுகளையேனும் ஒரு கட்டமைப்பாகப் பாதுகாக்கவேண்டியது காலக் கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர் விதைத்த விதைகள் விருட்சமாக வளரட்டும்

கமலநாயகி கதிர்காமநாதன்
ஓய்வுநிலை அதிபர்
கொக்குவில் ஸ்ரீ இராமகிருஸ்ணன் வித்தியாலயம்

யாழ்ப்பாண நகருக்கு மிக அண்மையிலுள்ள கிராமம் மண்டைதீவு. அங்கு 1964 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 23ஆம் திகதி திருவாளர் கனகசபை பத்மாவதி தம்பதியினருக்கு 4 ஆவது மகளாக பிரதி அதிபர் புண்ணியவதி பிறந்தார். இவர் தனது ஆரம்பக்கல்வியை யாழ்.மண்டைதீவு மகா வித்தியாலத்திலும், இடைநிலைக் கல்வி மற்றும் உயர் கல்வியை யாழ்.வேலணை மத்திய கல்லூரியிலும் கற்றார். உயர்தரத்தில் வணிகத்துறையை விரும்பிக்கற்றார். உயர் தரத்தில் சிறந்த சித்தியும் பெற்றார். 1984 ஜனவரி மாதம் 2ஆம் திகதி இவருக்கு யாழ். ஹனுப்பிட்டிய முஸ்லீம் கல்லூரியில் ஆசிரியப் பணியை மேற்கொள்ள கடிதம் கிடைத்தது. இனக்கலவரம் நடந்த அன்றைய கால கட்டத்திலும் மாமனாரின் உதவியுடன் முற்றிலும் வித்தியாசமான கலாசாரம், பண்பாடு என்பவற்றுக்கு ஈடுகொடுத்து நியமனத்தை துணிவுடன் ஏற்றுக்கொண்டார். அவரது அயராத முயற்சியாலும் கடின உழைப்பாலும் யாழ்.பல்கலைக்கழகத்தில் வணிகத்துறையில் கல்வியை முடித்து 1989ஆம் ஆண்டில் பட்டதாரியாகவும் தன்னை உயர்த்திக் கொண்டு தொடர்ந்து 1994ஆம் ஆண்டில் பட்டப்படிப்பை நிறைவுசெய்தார்.

1990ஆம் ஆண்டு மே மாதம் இடமாற்றம் மூலம் யாழ்.கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலத்தில் இணைக்கப்பட்டார். அவரின் பாடப்புலமை காரணமாக நல்லூர் கோட்டத்தில் யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரியில் 1991 பெப்ரவரியில் இடமாற்றம் செய்யப்பட்டு உயர்தர வகுப்புகளில் கணக்கியல் பாடத்தை கற்பித்தார். 19 வருடங்கள் அங்கு ஆசிரியராக கடமையாற்றினார். 'ஆங்கொர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் மிகவும் பெறுமதி மிக்கது' என்பதை எந்நேரமுமம் தனது சிந்தையில் கொண்டவர். பல்வேறு காரணிகளால் குலைந்துவிட்ட மானிட சமூகத்தில், குடும்பங்களில் பிள்ளைகள் நிலை தடுமாறி நிற்கும் வேளையில் மாணவ சமுதாயத்தில் தனித்தனி பிரச்சினைகளுக்கு செவிசாய்த்து அவர்களின் மனங்களை ஆராய்ந்து கற்பிக்கும் கரிசனை மிக்க அசிரியராக திகழ்ந்தார்.
தனது மேலான நேரத்தை மாணவர்களுக்காக பெரிதும் தியாகம் செய்தார் என்பதை மாணவர்கள் அறிவார்கள். 2010 ஜுலையிலிருந்து யாழ்.கொக்குவில் ஸ்ரீ இராமகிருஸ்ஷ வித்தியாலயத்துக்கு இடமாற்றம் பெற்றார். வணிகக் கல்வியைத் தவிர தாய்மொழி, கணிதம், தகவல் தொழில்நுட்பம், சமயம் போன்ற பாடங்களையும் கற்பிக்கும் திறன் கொண்டவர். மெல்லக் கற்போரையும், மீத்திறன் மாணவர்களையும், விசேட தேவையுடையோரையும் ஒரே வகுப்பில் வைத்து கற்பிக்கும் திறன் கொண்டவர். இவரிடம் கற்ற மாணவர்கள் பலர் வெளிநாடுகளிலும், கணக்கியல் துறையிலும், வங்கிகளிலும், உயர் நிறுவனங்களிலும் தொழில் புரிவதோடு மற்றும் பல துறைகளிலும் தொழில் முயற்சியாளர்களாக காணப்படுகின்றனர். 2024 பெப்ரவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஒகஸ்ட் 2ஆம் திகதி வரை யாழ்.கொக்குவில் ஸ்ரீ இராமகிருஸ்ணன் வித்தியாலயத்தில் பதில் அதிபராக கடமையாற்றிய காலத்தில், பல பழைய மாணவர்களின் உதவியுடன் பாடசாலையின் பௌதீகவளத்தை மாற்றியமைத்தார்.
பதில் அதிபர் சேவை 6 மாத காலமானாலும் அவரின் சேவை அளப்பரியது. நல்லாசிரியன் என்பவன் பிறர் நலன் விழைபவன் என்ற ஏட்டுக் கருத்துக்கு உதாரணமாக திகழ்ந்தவர் ஆசிரிசை புண்ணியவதி என்று கூறலாம். இந்த மாதத்தில் ஓய்வுபெறும் அம்மையார் என்றென்றும் நோய் நொடியின்றி சிறப்புடன் வாழவேண்டும் என்பதே, கல்விச் சமூகத்தின் எதிர்பார்ப்பு.



யாழ்.கொக்குவில் ஸ்ரீ இராமகிருஸ்ணன் வித்தியாலயத்தில் பதில் அதிபராகக் கடமையாற்றிவரும் புண்ணியவதியின் பணி ஓய்வை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.

# காலத்தின் தேவை நூலகங்கள்

திருமதி நவதீசன் உதயலதா
விரிவுரையாளர்

*'புத்தகமே சாலத் தொகுத்தும் பொருள் தெரியார்
உய்த்தகம் எல்லாம் நிறைப்பினும் மற்றவடறைப்
போற்றும் புலவரும் வேறே பொருள் தெரிந்து
தேற்றும் புலவரும் வேறு'*

இது நாலடியார் தருகின்ற ஒரு பாடல். புலவர் ஒருவர் தான் தேடிவந்த நூல் நூலகத்தில் கிடைக்காதது மட்டுமன்றி அங்கிருந்த ஏனைய நூல்களும் வழிகாட்டலுக்கான உசாத்துணை உதவிகளைக் கூடச் சரியாக மேற்கொள்ளாத காரணத்தினால் சினம் மேலிடப் பாடிய பாடலாகும். இந்தப் பாடலானது அந்தக் காலத்திலேயே நூலகம் காணப்பட்டிருக்கின்றது என்பதை சான்று படுத்துகின்றது. நூலகமானது அதனது கருத்துச் செறிவுக்கு ஏற்றவாறு வெவ்வேறு பெயர்களால் தமிழில் வழங்கப்பட்டு வந்திருக்கின்றது. சரசுவதி பண்டாரம், புத்தகப் பண்டாரம், ஏடகம், சுவடிச்சாலை, வாசகசாலை, சுவடியகம், படிப்பகம், புத்தகசாலை, நூல் நிலையம் போன்றனவாகும். இவற்றுள் நூலகம், நூல் நிலையம், வாசகசாலை தவிர்ந்த ஏனையவை இன்று வழக்கொழிந்து போயின.
நூலகம் என்பதை யுனெஸ்கோ பின்வருமாறு வரையறை செய்கிறது. 'நூலகம் என்பது கல்வியறிவிற்கான உயிருள்ள சக்தி, கருத்துத் தகவல் மையம், பண்பாட்டை வலியுறுத்தும் அமைப்பு, மக்களுக்கும் நாட்டுக்கும் இடையே அமைதியையும் புரிதலையும் உண்டாக்குகின்ற இன்றியமையாத தரகர்'. யுனெஸ்கோவின் இந்த வரையறை நூலகம் தொடர்பான புரிதலை எமக்குள் ஏற்படுத்துகின்றது. 'சிந்திக்கின்ற மனிதன் தன் கருத்தை நூல் உருவில் பதித்து அது அடுத்தவருக்கும் பயன்படச் சேர்த்து வைக்கின்றான்.
பாடசாலை, பல்கலைக்கழகக் கல்விக் காலங்களில் நாம் வாசிப்பதோடு மட்டும் நின்று விடாது, தொடர்ந்தும் நம் வாசிப்புப் பழக்கத்தினை நீடிப்பதற்கான ஓர் இடமாக அமைந்தவை தான் நூலகங்கள். இதனால் தான் 'நூலகம் ஒரு அறிவார்ந்த நிறுவனம்' எனப் போற்றப்படுகிறது. உலகிலே அன்றாடம் ஆயிரக்கணக்கான நூல்கள் பல மொழிகளிலும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இவற்றில் தாம் விரும்புகின்ற நூல்களை மட்டுமாவது வாங்கி வாசிப்பது என்பது கூட இயலாத காரியம். ஆயின் நூலகங்களின் உதவியினால் தான் பல புத்தகங்களையும் வாசிக்க முடிகின்றது. உலக அறிவையும் பெற்றுக் கொள்ள முடிகின்றது. இந்தக் கருத்தை வலுவூட்டுவதாகவே, 'நூலகம் என்பது உலக அறிவை அடைவதற்கான திறவுகோல்'. என்ற ஜவஹர்லால் நேருவின் கூற்று அமைந்திருக்கின்றது.
நூலகங்களில் ஒவ்வொரு மனிதனும் செலவிடும் பொழுதுகள் தவப்பொழுதுகளன்றி அவப்பொழுதுகளல்ல. பரந்து விரிந்து கிடக்கின்ற இந்தப் பூவுலகின் ஒவ்வொரு பகுதியிலும் கிடைக்கின்ற அரிய விடயங்கள், கருத்துகள், அறிஞர் தம் ஆளுமைகள் யாவற்றையும் நூல்கள் வாயிலாக அறிந்து கொள்வதற்கான அரியதோர் இடமாக நூலகங்கள் அமைந்திருக்கின்றன.
நம் நாட்டில் காணப்படுகின்ற அனைத்து நூலகங்களினதும் அடிப்படையான, பிரதானமான நூலகமாக அமைந்திருப்பது தேசிய நூலகமாகும். இது 'தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை' என அழைக்கப்படுகின்றது. இதனுடைய தூரநோக்கும், பணிக்கூற்றும் எந்தக் காலத்துக்கும் பொருந்தக் கூடியனவாகவும், தொடரக்கூடிய ஒவ்வொரு தலைமுறைக்கும் ஏற்ற வகையிலும் அமைக்கப்பட்டு இருக்கின்றன. தூரநோக்கு 'சகல மக்களுக்கும் நூலகம், மற்றும் தகவல் சேவைகள் பிரவேசத்தை வழங்குகின்ற தேசிய அறிவு கேந்திர நிலையமாக மாறுதல்' என்பதாகும். இவ்வாறே பணிக்கூற்று 'அறிவார்ந்த சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதற்காக தேசத்தின் அறிவு சார்ந்த மரபுகளைப் பாதுகாப்பது' என்பதாகும்.
நூலகத்தைப் பயன்படுத்தும் வாசகர்கள் அதன் உச்சப் பயனைப் பெறக் கூடியதாக இருக்க வேண்டும். அவ்வாறு அமைய வேண்டுமெனின் நூலகமானது அச்சு சாதனங்கள், இலத்திரனியல் சாதனங்கள், கற்பித்தல் சாதனங்கள், பண்டைய மரபு சார்ந்த பேணப்பட வேண்டிய சாதனங்கள் போன்ற வளங்களைக் கொண்டிருப்பதுடன் அவை வாசகர்களின் பயன்பாட்டுக்கு ஏற்ற வகையில் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கவும் வேண்டும்.
இவ்வாறாக நூலகங்கள் மனித சமுதாயத்திற்குப் பல வழிகளிலும் பயன் தரும் ஓரிடமாகக் காணப்படுவது எமக்குக் கிடைத்தவொரு வரப்பிரசாதமாகும். எனவே நூலகங்களை அதிகமதிகமாய்ப் பயன்படுத்தி அதிகமான பயனைப் பெற்றிடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களப்பைக் கடப்பதற்கு கடுமையான போராட்டம்



ச.தனுஷ்கா
*ஊடகக் கற்கைகள் துறை*
*யாழ்.பல்கலைக்கழகம்.*

நவீனத்துவமும் அபிவிருத்தியும் வளர்ச்சியடைந்திருக்கும் இக்கால கட்டத்திலும்கூட அத்தியாவசியத் தேவைகளை பூர்த்தி செய்யமுடியாத மக்களும் இலங்கையில் வாழ்கின்றமை மறுக்க முடியாத உண்மையாகும். அந்த வகையில் கிழக்கு மாகாணத்தில் திருகோணமலையின் மூதூர் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள ஷாபிநகர் வேதத்தீவில் வசிக்கும் மக்கள் முறையான போக்குவரத்து வசதிகளின்றி அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். இந்தக் கிராமத்தில் உள்ள மக்கள் தமது அன்றாட போக்குவரத்துத் தேவைக்காக இழுவைப் பாதையில் அச்சத்துடன் பயணிக்கின்றனர். பிரதேச மக்கள் தமக்கான பாலம் ஒன்றை அமைத்துத் தருமாறு பல்வேறு தரப்பினரிடம் கோரிக்கைகளை விடுத்த போதிலும் இதுவரை முறையான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை.

மூதூர் ஷாபிநகர் கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள வேதத்தீவு கிராமத்திலிருந்து மூதூர் நகருக்குச் செல்வதற்குத் தரைவழிப் போக்குவரத்து இல்லை. இதனால் சுமார் 50 மீற்றர் தூரத்துக்கு இழுவைப் படகு மூலம் மக்கள் பயணம் செய்து வருகின்றனர்.

தினந்தோறும் காலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை இப் படகுச்சேவை இடம்பெறுகின்றது. இப்படகுச்சேவைக்கு என திருகோணமலை வீதி அபிவிருத்தித் திணைக்களம் ஒரு ஊழியரை கடமைக்கு அமர்த்தியுள்ளது. குறித்த நபரின் கடமை நேரத்திற்கு அப்பால் ஏதேனும் அவசரத் தேவைகள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் வேதத்தீவு மக்களின் போக்குவரத்து தடைப்படுகின்றது. ஊழியர் சேவைக்கு வருகை தருவதற்கு தவறும் பட்சத்தில், மறு திசையில் படகு நிறுத்தி வைக்கப்படுமாக இருந்தால், எதிர்த் திசையில் நிற்பவர்கள் களப்புக் கடலூடாக 50 மீற்றர் தூரத்திற்கு நீந்திச் சென்று இழுவைப் படகை எடுத்து வர வேண்டிய நிலை காணப்படுகின்றது.

வேதத்தீவு களப்பில் அதிகளவான முதலைகள் காணப்படுகின்றன. இதனால் களப்பில் நீந்துவதற்கு மக்கள் அச்சமடைகின்றனர். நீந்திச்சென்ற ஒருவருக்கு முதலை கடித்துக் காயமடைந்த சம்பவமும் இடம்பெற்றுள்ளது. தினந்தோறும் வேதத்தீவு இழுவைப் பாதையை கிராமத்திலுள்ளவர்களும் தொழிலில் ஈடுபடுவோருமான ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பயன்படுத்துகின்றனர். மேலும் பாடசாலை மாணவர்கள், விவசாயம் செய்வோர், விறகு தொழிலில் ஈடுபடுவோர், அரச அலுவலகங்களில் பணிபுரிகின்றவர்களும் இந்தப் பாதையூடாகவே பயணித்து வருகின்றனர்.

அரசியல்வாதிகளின் கவனத்துக்கு இந்தப் பிரச்சினை எடுத்துச் செல்லப்பட்ட போதிலும் அவர்களது அக்கறையும் கரிசனையும் வெறுமனே தேர்தல் காலப் பகுதிகளில் பிரச்சாரங்களுக்கான பேசுபொருளாகவே இதுநாள் வரையிலும் அமைந்துள்ளது. தேர்தல் பரப்புரைக்கு வருகின்ற அரசியல்வாதிகள் வேதத்தீவில் வசிக்கும் மக்கள் தமது ஜனநாயக உரிமையைக்கூட நிறைவேற்றமுடியாத நிலைமையில் உள்ளனர் என்பதில் கவனம் செலுத்த தவறியுள்ளனர் என்றுதான் கூறவேண்டும். ஏனெனில் மூதூர் வேதத்தீவில் தேர்தல் வாக்களிப்பு நிலையம் இல்லாமையால் ஷாபிநகர் கிராமத்திலுள்ள பாடசாலையில் அமைக்கப்படும் வாக்களிப்பு நிலையத்துக்கு இழுவைப் படகு மூலமே வாக்களிப்பதற்குச் செல்வதாகவும், இதனால் காலதாமதம் ஏற்படுவதாலும், வயதானவர்கள் சிலர் பாதையில் பயணிப்பதில் சிரமம் என்பதால் வாக்களிப்பதற்குச் செல்வதில்லை. வேதத்தீவில் பாலம் அமைத்துத் தருவதாக அடிக்கல் நடப்பட்டு,அளவை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இருப்பினும் இன்று வரையிலும் முறையான செயற்பாடுகளோ, பாலத்தை கட்டுவதற்கான வேலைத்திட்டங்களோ ஆரம்பிக்கப்படவில்லை.

ஷாபிநகர்வேதத்தீவு இழுவைப் படகுச்சேவையானது தமது பிரதேச செயலகப் பிரிவில் காணப்பட்டாலும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கண்காணிப்பில உள்ளது. இவ் விடயம் தொடர்பாக அவர்களே பொறுப்புக் கூறவேண்டும். இருப்பினும் மூதூர் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டங்களில் வேதத்தீவு பாலம் அமைப்பது தொடர்பாகப் பல தடவைகள் பேசப்பட்டுள்ளன.வேதத்தீவு கிராம மக்களின் நலன் கருதி, அங்குப் பாலமொன்று கட்டாயம் அமைத்துக் கொடுக்கப்பட்ட வேண்டும்எனத் தெரிவித்தார். தொழிலில் ஈடுபடுவோரதும் அத்தியாவசியத் தேவைகளுக்காக வேதத்தீவு பாதையைக் கடந்து செல்வோரது நலன் கருதியும் வேதத்தீவில் பாலம். அமைத்துக் கொடுக்கப்பட வேண்டியது காலத்தின் தேவையாகும். தற்போது திருகோணமலையின் பிரதிநிதிகளாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களாவது இந்தப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை மேற்கொள்வார்களா? என மூதூர் ஷாபிநகர் கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள வேதத்தீவு கிராம மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

சவுந்து

# மீனவர் துயர் தீருமா?

மீனவர் பிரச்சினை வடக்கும், வடக்குக் கடல் சார்ந்ததுமாகப் பார்க்கப்படாமல் நாடும், நாடுகள் கடந்ததுமாகப் பார்க்க வேண்டும். இல்லையேல் இரண்டு மீனவ சமூகத்துக்கான பிரச்சினையாக பார்க்கப்பட்டால் அவை பின்னர் நாடுகளுக்கிடையே சிக்கலான ராஜதந்திர அரசியல் பிரச்சினையாக உருப்பெறும்.

இனம், மொழி, நிலப்பரப்பால் வேறுபட்டிருந்தாலும் இலங்கை மீனவர்களும், இந்திய மீனவர்களும் அடிப்படையில் மீனவ சமூகத்தினரே. அவர்களுக்கு கடல் பற்றிய புரிதல் உண்டு. மீன்பிடித் தொழிலிலுள்ள பிரச்சினைகள், கஷ்டங்கள், நஷ்டங்கள் குறித்து அனுபவம் உண்டு. மீனவர்கள் தொடர்பான அறிதல் மற்றும் புரிதல் இல்லாத இருநாட்டு அரசியல்வாதிகள் 'குழம்பிய குட்டையில் சுயநல அரசியல்' செய்து இருநாட்டு மீனவர்களை மோதவிடுவது உண்மையான அரசியலுக்கு அழகு இல்லை.

கச்சதீவு அந்தோனியார் ஆலயத் திருவிழாவில் இருநாட்டு மீனவர்களும் அன்பு பாராட்டி, கட்டித் தழுவுதலைக் காணமுடியும். இரு சமூகத்து மீனவர்களும் அந்த ஆலயப் பெருவிழாவில் தாம் கொண்டுவந்த உணவுகளை அன்புடன் பரிமாறி உண்பதை காணமுடியும். அவர்களுக்கு கச்சதீவு யார் கையில் இருப்பது என்பது ஒரு பொருட்டே இல்லை. ஆனால் இருநாட்டு அரசியல்வாதிகள் சுயலாப அரசியலுக்காக கச்சதீவுப் பிரச்சினையை பூதாகரமாகப் பெருப்பித்து இருநாட்டு மீனவ சமூகங்களை மோதவிடுகின்றனர். இதைவிட இருநாட்டுக் கடற்படைகளும் மாறி மாறி மீனவர்களை பந்தாடுகிறது.

கடற்பரப்பை எல்லைபோட்டுப் பிரிப்பதை விட மீன்வளத்தை எப்படி இருநாட்டு மீனவர்களும் சண்டை சச்சரவு இன்றி பங்கிட்டு தொழில் செய்வது என்பதுதான் முக்கியம். இதைவிட அதீத பிரச்சினை இயற்கையிலுள்ள அனைத்து வளமும் எதிர்கால சந்ததியினரை கருத்தில் கொண்டு திட்டமிட்டுப்பட வேண்டும். கடல் தொடர்பான புரிதலும், அறிதலும் கொண்ட இருநாட்டு மீனவர்களும் எதிர்கால சந்ததியினரின் தேவை கருதி சரியான பொறிமுறை ஊடாக, சூழலுக்கு நேயமான முறையில் தமது மீன்பிடிப்பை மேற்கொள்ளவேண்டும். அதாவது மிகவும் பழமையான முறைகளாக இல்லாது, அதேபோல அதிநவீன முறைகளூடாக மீன்வளத்தை சுரண்டி அழிக்கவும் கூடாது. தமது மீன்பிடித்தல் நடவடிக்கையிலுள்ள கஷ்ட நஷ்டங்களைப் புரிந்து கொண்டு உரிய மீன்பிடித்தல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஒற்றுமையாக கடலன்னையின் பிள்ளைகளாக வாழவேண்டும். ஏனெனில் கடலில் படகை ஓட்டித்தான் மீனவர்கள் தமது வாழ்வாதாரத்தை ஓட்டவேண்டும். அவ்வாறு கடலுக்குச் சென்றவர்கள் எல்லா நாள்களும் மீனோடு திரும்புவார்களா என்றால் இல்லை. மீனோடு திரும்பாவிடினும் உயிருடனாவது திரும்ப வேண்டுமென்பதே உறவினர்களின் ஏக்கமாகவிருக்கும். மீனவன் வலையை கடலில் போட்டு மீனுக்காக காத்திருக்கிறான். அவன் வரவிற்காக கரையில் மனைவியும், பிள்ளைகளும் ஏக்கத்துடன் காத்திருக்கிறார்கள். நிலத்தில் அறுவடை செய்யும் விவசாயிக்கு பெருமளவு பாதுகாப்பு உண்டு. ஆனால் கடலில் அறுவடை செய்யும் மீனவனுக்கு பாதுகாப்பு கரை திரும்பும் வரை உறுதி செய்யப்படவில்லை. தண்ணீரில் அறுவடை செய்து தரும் வடக்கு மீனவர்கள் மற்றும் தமிழக மீனவர்கள் இனிமேலும் கண்ணீர் விடாது இருக்க புதிய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பரஸ்பர புரிதலை இருநாட்டு மீனவர்களிடமும் மலரச் செய்யுமா என்பதே இப்போதுள்ள எதிர்பார்ப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிசங்கம்
## சிற்றுண்டிச்சாலை, சைக்கிள் பாதுகாப்பு நிலையம் கேள்வி அறிவித்தல் -2025

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் சிற்றுண்டிச்சாலை, சைக்கிள் பாதுகாப்பு நிலையம் ஆகியவற்றை 01.01.2025 முதல் 31.12.2025 வரை குத்தகைக்கு விடுவதற்கு கேள்வி கோரப்பட்டுள்ளது

ஆர்வம் உள்ளவர்கள் அதற்கான விண்ணப்பப் படிவத்தினை மீளளிக்கக்கூடிய கொடுப்பனவாக ரூபா 1000.00 உம் மீளளிக்க முடியாத கொடுப்பனவாக ரூபா 100.00 உம் செலுத்துவதன் மூலம் நோயாளர் நலன்புரிசங்கத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 27.12.2024 முற்பகல் 10.00 மணிக்கு முன்பு கிடைக்கக்கூடியதாக நேரிலோ அல்லது பதிவுத் தபால் மூலமோ தலைவர். நோயாளர் நலன்புரிசங்கம். ஆதார வைத்தியசாலை. சாவகச்சேரி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**செயலாளர்.**

(CR/43906) J-1

## நல்லூர் பிரதேச சபை பொது அறிவித்தல்
## 2025ஆம் ஆண்டிற்கான படவரைஞர்களை பதிவு செய்தல் / புதுப்பித்தல்

நல்லூர் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் கட்டட நிர்மாண அனுமதியினை பெற்றுக்கொள்ளும் முகமாக கட்டட வரைபடத்தினை வரையும் படவரைஞர்களை பதிவு செய்ய / புதுப்பிக்க சபையினால் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

NVQ நிலை 5 இல் தொழில்நுட்பம் (கட்டடம் ) Drafting Technology (Buildings) NVQ Level 5 கற்கை நெறியினைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்கள் 2024.12.31 ஆம் திகதிக்கு முன்னராக சபையுடன் தொடர்பு கொண்டு உரிய பதிவினை மேற்கொள்ளுமாறு / புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

சபை ஆளுகைப் பகுதியானது நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் உள்வாங்கப்பட்டதன் அடிப்படையில் 2021.07.08ம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நகர அபிவிருத்தி அதிகார சபையின் ஒழுங்கு விதிகளின் அட்டவணை 3 இல் குறிப்பிடப்பட்ட தகைமை பெற்ற நபர்களால் வரையப்படும் வரைபடங்கள் மாத்திரமே 01.01.2025 ம் திகதி முதல் கட்டட அனுமதிப்பத்திரம் வழங்கலுக்கான பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

செயலாளர்,
நல்லூர் பிரதேசசபை.

18.12.2024

(CR/43911) J-1

# கண்ணீர் காணிக்கை

தோற்றம் 20 . 11 . 1939



மறைவு 15 . 12 . 2024

### அமரர் நடராசா கமலாதேவி

எமது பாடசாலை ஆசிரியை திருமதி திருமகள் கண்ணதாசன் அவர்களின் அன்புத் தாயார் கடந்த 15.12.2024 ஞாயிற்றுக்கிழமை காலமானார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
**யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்**

(CS/56949) J-1

## யாழ்ப்பாணம் மாநகர சபையின் சட்ட ஆலோசனை வழங்குநர்களை பதிவு செய்தல் - 2025

எமது சபையானது 2025 ஆம் ஆண்டில் சபைக்கு சட்ட ஆலோசனை வழங்குவதற்காக நீதி மன்றங்களில் வழக்குகளைக் கையாளுதல் தொடர்பாக 10 ஆண்டுகள் முனைப்பான சேவைக் காலத்தை முன்னனுபவமாகக் கொண்ட சட்ட ஆலோசகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

விண்ணப்பப் படிவங்கள் சபையின் தாபனப் பகுதியில் 18.12.2024ம் திகதி தொடக்கம் 31.12.2024 வரை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் பதிவுக் கட்டணமாக ரூபா 1,000.00 + VAT 18% இனை சபையின் முன்னரங்கு அலுவலகத்தில் கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப 3.00 மணி வரை செலுத்த முடியும்.

விண்ணப்பப் படிவங்கள் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் " சட்ட ஆலோசனை வழங்கலுக்கான விண்ணப்பம் - 2025" எனக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது நேரடியாக "மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.


விண்ணப்பப் படிவங்கள் 31.12.2024 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

மேலதிக விபரங்களுக்கு 021 221 7984 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**மாநகர ஆணையாளர்,**
**மாநகரசபை, யாழ்ப்பாணம்.**

18.12.2024

# பன்னிரண்டாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 08.03.1949 — மறைவு 30.12.2012

அமரர்

### உயர்திரு நடராசா முருகதாசன்

(உரிமையாளர் - விநாயகர் ஸ்ரோர்ஸ் - கைதடிச்சந்தி)

நாட்களும், வாரங்களும், மாதங்களும் தான் அவை
கடந்திட வருடங்களோ பன்னிரண்டாகிவிட்டதே!
மனிதருள் மாணிக்கமாய் பண்பு நிறைந்த பேரொளியாய்
பக்குவமாய் பேசி அன்பால் அரவணைத்த தந்தையே

எம் வாழ்வின் ஒளி விளக்காய் திகழ்ந்து
எம்மை நல்வழி நடத்தி வையத்துள்
வாழ்வாங்கு வாழ்ந்து அன்பு வழிகாட்டி
ஆதரவு தந்து இன்பமுடன் வாழ வைத்த தந்தையே

நீண்டு செல்லும் நாட்கள் அனைத்தும்
விண்ணுறையும் தெய்வமாகிவிட்ட உம்மை
எம் நெஞ்சினில் நிறுத்தி நித்தமும் நினைத்திடுவோம் நாம் ....
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

என்றும் உங்கள் நினைவுகளுடன்வாழும்

**கைதடி கிழக்கு, கைதடி.** (CS/2060) J-1 **குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

மண்ணில் 26 . 06 . 1932



விண்ணில் 17 . 12 . 2024

### மயில்வாகனம் சபாரத்தினம்

அம்மன் கோவிலடி குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும். வசிப்பிடமாகவும் கொண்ட திரு. மயில்வாகனம் சபாரத்தினம் அவர்கள் நேற்று (17.12.2024) செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - குட்டிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - செல்லம்மா தம்பதியினரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற தனேஸ்வரி அவர்களின் பாசமிகு கணவரும், சித்திரா, ரஞ்சனா (ஜேர்மனி), காஞ்சனா (டென்மார்க்), கல்பனா, ரத்தினா (ஜேர்மனி), சத்தியநேசன், பூம்புகனேஸ்வரி (ஆசிரியர் யா/ பொன். பரமானந்தர் ம.வி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சுதேஸ்வரன், தவராஜா, அமரேசன், பாலச்சந்திரன், ராஜேஷ், சந்திரகலா (ஆசிரியர் யா/ இணுவில் மத்திய கல்லூரி) காலஞ் சென்ற ரமேஸ்குமார் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஸ்வாதி, சோபியா, சுஜித்தா, றொமீனா, டேசிகா, கௌசிகா, ஜனித்தன், றமீலா, சந்தோஷ், விகஸ்னி, நேருஜன், நேசமித்திரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (18.12.2024) புதன்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 1.00 மணியளவில் குப்பிளான் காடகடம்பை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**மகன் - சத்தியநேசன்**
**076 753 5639**

**அம்மன் கோவிலடி,**
**குரும்பசிட்டி கிழக்கு.**

(CS/56950) J-1

## நினைவேந்தல்

யாழ்., டிசெ.18

கொழும்பில் படுகொலை செய்யப்பட்ட அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவரும், வழக்கறிஞருமான மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 25 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு பிரதான வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள கலைத்தூதுக் கலையக மண்டபத்தில் எதிர்வரும் ஜனவரி மாதம் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணியளவில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு குமார் பொன்னம்பலம் நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவினர் கேட்டுள்ளனர்.

(ச-45-66)

## கருத்துக்கேட்பு

இலங்கையில் வன விலங்குகளால் ஏற்படும் பயிர்ச் சேதங்களை தடுக்கும் வகையில் பொதுமக்களிடம் கருத்துகளை பெறும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, குறுகிய திட்ட முன்மொழிவுகளைத் தயாரித்து addlsecdey@agrimin.gov என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறு, அறிஞர்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் உட்பட இலங்கையின் அனைத்து குடிமக்களையும் விவசாய அமைச்சகம் கேட்டுக் கொண்டுள்ளது.

(ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# மத்தியஸ்த தின நிகழ்வுகள்

வவுனியா, டிசெ.18

மத்தியஸ்த தின நிகழ்வுகள் நீதி அமைச்சின் மாவட்டப் பயிற்சி உத்தியோகத்தர் இ.விமல்ராஜ் தலைமையில் வவுனியா மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் வவுனியா மாவட்டத்துக்கான மத்தியஸ்த சபையின் செயற்பாடுகள், எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பிலும் கருத்துரைகளும், அனுபவப் பகிர்வுகளும் முன்வைக்கப்பட்டன. நிகழ்வில், வவுனியா மாவட்டச் செயலர் பீ.ஏ.சரத்சந்திர, மேலதிக மாவட்டச் செயலர் தி.திரேஸ்குமார், மேலதிக மாவட்டச் செயலர் (காணி) ந.கமலதாசன், உதவி மாவட்டச் செயலாளர் எம்.சபர்ஜா, விசேட காணி மத்தியஸ்தசபை மற்றும் ஏனைய மத்திய சபைகளின தவிசாளர்கள், மத்தியஸ்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச-45-110)







தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் 'அற்றார் அழி பசி தீர்த்தல்' எனும் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு வவுணதீவுப் பகுதியில் தெரிவுசெய்யப்பட்ட கர்ப்பிணித் தாய்மார்களுக்கு உலருணவுப் பொதிகளை கடந்த புதன்கிழமை வழங்கியுள்ளது. தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் இ. சூரியகுமார், சூழல் பாதுகாப்பு அணியின் துணைச் செயலாளர் த.யுகேஸ் ஆகியோர் உலருணவுப் பொதிகளை வழங்கி வைத்தனர். (ச-25)

# சான்றிதழ் வழங்கல்

யாழ்ப்பாணம், டிசெ.18

இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகத்தின் கற்கைநெறிகளில் சித்திபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இலங்கை சமுத்திர பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் கோ. அருள்சிவம் தலைமையில், மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக யாழ். மாவட்ட செயலர் ம. பிரதீபன், இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் வசந்த இரட்நாயக்க ஆகியோர் கலந்து கொண்டனர் (ச-25, 9)



# கலந்துரையாடல்

கிளிநொச்சி, டிசெ.18

தமிழரசுக்கட்சி சார்பாக கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள மூன்று பிரதேசசபைகளில் போட்டியிடுவதற்காக வேட்பு மனுத்தாக்கல் செய்தவர்களுக்கும் மற்றும் பிரதேசசபை முன்னாள் உறுப்பினர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தலைமையில் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் கிளிநொச்சி அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதன்போது, எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இளைஞர்கள், பெண்கள் மற்றும் புதியவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கவுள்ளதாகவும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டு தேசியத்துடன் பயணிக்கும் தமிழ்க் கட்சிகளோடு ஆட்சியமைப்பதே நோக்கம் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கருத்துத் தெரிவித்தார். (ச-25, 113)



# சந்நிதி ஆச்சிரமத்தால் துவிச்சக்கரவண்டிகள்

யாழ்ப்பாணம், டிசெ.18

சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்வு சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் 'நாமங்களின் பெருமை' எனும் தலைப்பில் ஆசிரியர் உமாராணி பேரானந்தம் ஆன்மீக உரை ஆற்றினார்.

நிகழ்வில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பொருளாதாரம் நலிவுற்ற குடும்பங்களைச் சேர்ந்த மூன்று மாணவிகளுக்கு 145,200 ரூபா பெறுமதியான புதிய துவிச்சக்கரவண்டிகள் சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தால் வழங்கிவைக்கப்பட்டதோடு, மலையகம் பண்டாரவளையைச் சேர்ந்த பொருளாதாரம் நலிவுற்ற குடும்பமொன்றின் வீடு திருத்தச் செலவுக்காக ஒரு லட்சம் ரூபா நிதியும், பண்டாரவளையைச் சேர்ந்த பொருளாதாரம் நலிவுற்ற குடும்பமொன்றுக்கு மருத்துவச் செலவுக்காக ஒரு இலட்சம் ரூபா நிதியும் வழங்கப்பட்டது. (ச-45-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொவிட் ஜனாஸாக்கள் தகனம் பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீடு

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்தது

**கொழும்பு, டிசெ. 18**

**முன்னாள் ஜனாதிபதி கோத்தாபயவின் ஆட்சிக்காலத்தில், கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் ஜனஸாக்களை தகனம் செய்த தீர்மானத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்தியுள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போது சஜித் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபயவின் ஆட்சிக் காலத்தில் இலங்கையில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்த முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் எரிக்கப்பட்டன. கொரோனாத் தொற்றால் உயிரிழந்தோரின் சடலங்களை அடக்கம் செய்ய முடியும் என்று உலக சுகாதார நிறுவனம் வழங்கிய வழிகாட்டுதல்களையும் மீறி, முஸ்லிம்களின் மத நம்பிக்கைக்கு மாறாக ஜனாஸாக்கள் எரிக்கப்பட்டன.

ஓர் இனத்தையும் மதத்தையும் இலக்கு வைத்தே கோத்தாபயவின் அரசாங்கம் நடந்து கொண்டது. உரிமைகள் மீறப்பட்ட இஸ்லாமிய சமூகத்தினருக்கு, பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கும் நீதி நிலைநாட்டப்பட வேண்டும். அதனால் கடந்த அரசாங்கத்தின் பிழையான தீர்மானத்தால் தகனம் செய்யப்பட்ட நபர்களின் குடும்பங்களுக்கு இழப்பீடுகள் வழங்கப்படவேண்டும் - என்றார். (ம-இ)

# விபத்தில் முதியவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 18

வீதியில் நடந்து சென்ற போது மோட்டார் சைக்கிள் மோதியதில் காயமடைந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நபர், சிகிச்சையின் போது நேற்று உயிரிழந்துள்ளார்.

குமாரபுரம், முள்ளியவளை பகுதியைச் சேர்ந்த கோவிந்தசாமி சிவானந்தன் (வயது-66) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

9ஆம் திகதி இந்த விபத்து சம்பவித்துள்ளது. மாஞ்சோலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர், மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில், சிகிச்சையின்போது நேற்று உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார். (ம-26)

நாடெங்கும்

# அதிக விலைக்கு அரிசி; ரூ. 700,000 அபராதம்

கொழும்பு, டிசெ. 18

கட்டுப்பாட்டு விலையை மீறி அரிசி விற்பனை செய்த ஆறு வர்த்தகர்களுக்கு ஏழு லட்சம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

அரிசியை அதிக விலைக்கு விற்பனை செய்த வர்த்தகர்களுக்கு எதிராக நுகர்வோர் அதிகார சபையால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் அடிப்படையிலேயே, இந்தத் தண்டம் விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-ம-இ)

## உறவுகளுக்கு...

கரன் வலியுறுத்தியுள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"கடந்த நவம்பர் மாதம் 27ஆம் திகதியன்று எமது மக்கள், தங்களது உறவினர்களுக்கு மிகவும் அமைதியான முறையில் நினைவஞ்சலி செலுத்தி தமது உணர்வை வெளிப்படுத்தி ஆறுதல் அடைந்தனர். இந்த விடயத்தில் ஜனாதிபதியின் நிலைப்பாட்டைப் பாராட்டுகிறேன். அதற்காக நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

இறுதிப்போரின் வலிகள் இன்னும் ஆறவில்லை. தமது உறவுகளை இழந்தவர்கள் நடைபிணங்களாக வாழ்ந்து வருகின்றனர். போரில் உயிரிழந்த தமது உறவுகளை மக்கள் நினைவுகூருவதற்கு அங்கீகரிக்கப்பட்ட ஒரு நினைவிடம் தேவை. இதுவே மக்களின் கோரிக்கையும்கூட. தற்போது அஞ்சலிப்பு இடம்பெற்றுவரும் முள்ளிவாய்க்கால் முற்றத்தில் இந்த நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற வேண்டும்.

முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் நினைவாகக் கட்டப்படும் நினைவாலயத்தில் உயிரிழந்தவர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டால், அவர்களை நினைவுகூருவதற்கு அவர்களின் சந்ததியினருக்குக்கூட உதவியாக இருக்கும். எமது இனத்தின் பண்பாட்டைப் பிரதிபலிப்பாகவும் அமையும். முள்ளிவாய்க்காலில் நினைவிடம் அமைக்கப்படவேண்டும். இதற்குரிய அனுமதியை அரசாங்கம் வழங்க வேண்டும். இனப் பாகுபாடு காட்டாமல் இந்த விடயத்தில் செயற்படுமாறு அனைவரையும் அழைக்கின்றேன்" - என்றார். (அ-ம-44)

## புலிகளுக்கு...

பிரித்தானிய பிரஜை கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டுள்ளார்.

மேற்படிநபர் கடந்த நவம்பர் மாதம் 30ஆம் திகதி தனது தாயின் இறுதிச் சடங்குக்காக இலங்கை வந்தபோது கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார். இந்த வழக்கு நேற்று கொழும்பு நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, சந்தேகநபர் சார்பாக ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா முன்னிலையானார்.

சந்தேகநபர் 2012ஆம் ஆண்டு நிதி சேகரித்தார் என்று பொலிஸார் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்துள்ளபோதும், 2024ஆம் ஆண்டு அவர் கைதுசெய்யப்படும் வரையில் அவருக்கெதிராக எந்தச் சான்றுகளும் முன்வைக்கப்படவில்லை என்பதை ஜனாதிபதி சட்டத்தரணி தனது வாதத்தில் சுட்டிக்காட்டினார். சந்தேகநபர் என்ன குற்றத்தைப் புரிந்தார் என்பதைப் பொலிஸார் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அறிக்கைகளில் தெளிவாகக் குறிப்பிடவில்லை என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி சட்டத்தரணி, இவ்வாறான சட்டரீதியற்ற கைதுகளால் புலம்பெயர் தமிழர்களின் முதலீடுகள் குறைவடைவதையும், சுற்றுலாத்துறைக்குப் பெரும் பாதிப்பு ஏற்படுவதுடன், அது இலங்கையின் பொருளாதாரத்தில் வீழ்ச்சியை ஏற்படுத்தும் என்பதையும் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்தார். முன்வைக்கப்பட்ட வாதங்களை அடுத்து, கொழும்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதி சந்தேகநபரை விடுதலை செய்தார். (அ-எ-125)

## புதிய...

எதிரணி தரப்பில் இருந்தும் சபாநாயகர் வேட்பாளர் ஒருவர் முன்மொழியப்படுவார் என ஐக்கிய மக்கள் சக்தி நேற்றுமுன்தினம் அறிவித்திருந்த போதிலும், கடைசி நேரத்தில் அந்தக் கட்சி தனது முடிவை மாற்றிப் பின்வாங்கியுள்ளது.

சபாநாயகர் பதவிக்கு மருத்துவக் கலாநிதி ஜகத் விக்கிரமரத்னவின் பெயரை பிரதமர் ஹரிணி அமரசூரிய முன்மொழிய, சபை முதல்வர் வழிமொழிந்தார். எதிரணித் தரப்பில் இருந்து எவரது பெயரும் முன்மொழியப்படவில்லை. இதனையடுத்தே சபாநாயகர் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

சபாநாயகராக பதவி வகித்த அசோக ரன்வல தனது கல்வித் தகைமை தொடர்பில் எழுந்த சர்ச்சையைத் தொடர்ந்து பதவி விலகியமையைத் தொடர்ந்தே, நேற்று புதிய சபாநாயகர் தெரிவு இடம்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## மாட்டின்...

உட்பட்ட பகுதியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, சம்பவ இடத்துக்கு வந்த மின்சாரசபையினர் மின்கம்பத்துக்கான மின் இணைப்பைத் துண்டித்துள்ளனர்.

கடைகள் சூழ்ந்திருக்கும் அந்தப் பகுதியில், மனிதர்கள் எவராவது அந்த மின்கம்பத்தைத் தொட்டிருந்தால் நேற்றுப் பெரும் அசம்பாவிதம் ஏற்பட்டிருக்கும். எனவே, பொறுப்பற்ற தனமான இந்த நடவடிக்கைக்கு பொது மக்கள் பலரும் தமது கண்டனத்தைத் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த மாடு மூன்றரை லட்சம் ரூபா பெறுமதியானது என்றும், அது குடும்பமொன்றின் வாழ்வாதாரத்துக்காக வளர்க்கப்பட்டு வந்தது எனவும் தெரியவருகின்றது. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னாள்...

நாடாளுமன்றத்தில் அவர் நேற்று மேலும் தெரிவித்ததாவது:-

"முன்னாள் ஜனாதிபதிகளுக்குரிய பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக குழு வொன்று அமைக்கப்பட்டது. அந்தக் குழுவால் பரிந்துரைகள் முன்வைக் கப்பட்டுள்ளன. அதேபோல உரிய பாதுகாப்பு மீளாய்வின் பின்னரே பாதுகாப்பு ஏற்பாடுகளை மறுசீரமைக் கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதிகளுக்குரிய பாதுகாப்பை நாம் குறைக்கவில்லை. அளவுக்கு அதிகமாக வழங்கப்பட்டி ருந்த பாதுகாப்பு உரிய மீளாய்வுகளுக் குப் பிறகு முறையாகக் கட்டமைக்கப் பட்டுள்ளது. எனினும், மக்களால் நிராகரிக்கப்பட்ட வங்குரோத்து அரசி யல்வாதிகள் இது தொடர்பில் தவ றான கருத்துகளை சமூகமயப்படுத்தி வருகின்றனர். இது மஹிந்த ராஜபக் சவை இலக்கு வைத்த நடவடிக்கை அல்ல. உரிய நிர்ணயங்களின் அடிப் படையில் முன்னெடுக்கப்பட்ட நட வடிக்கையாகும்.

மஹிந்த ராஜபக்சவுக்கு தற்போதுகூட 60 பொலிஸார், 228 முப்படையினர் பாதுகாப்பு உள்ளிட்ட பணிகளில் ஈடு பட்டுவருகின்றனர். முன்னாள் ஜனா திபதிகளுக்குரிய பாதுகாப்பு உள்ளிட்ட நடவடிக்கைகளுக்காக கடந்த 11 மாதங் களில் மாத்திரம் ஆயிரத்து 448 மில் லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இதைக் கட்டுப்படுத்தவேண்டும்.

மக்கள் எமக்கு வழங்கிய ஆணையின் பிரகாரமே நாம் செயற்படுவோம். எந் தவொரு அச்சுறுத்தல்களுக்கும் அடி பணியப் போவதில்லை. அந்தவகை யில் அடுத்த வாரத்திலிருந்து முன் னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புக் காகவழங்கப்பட்டுள்ளமுப்படையினர் மீளப்பெறப்படுவார்கள். பொலிஸ் பாதுகாப்பு மாத்திரமே வழங்கப்படும். ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை பாதுகாப்பு மீளாய்வு செய்யப்படும். முன்னாள் ஜனாதிபதிகளின் பாது காப்பு மட்டுமல்ல முழு நாட்டு மக்க ளின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்து வதே எமது நோக்கமாகும்" - என்றார். (அ-ம-44)

## நாடாளுமன்ற...

நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக் கார கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுச் செவ் வாய்க்கிழமை உரையாற்றுகையி லேயே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறிய தாவது:-

"நாடாளுமன்ற உறுப்பினர்களின் கல்வித் தகைமை தொடர்பில் கேள்வி எழுப்பும் உரிமை மக்களுக்கு உள் ளது. அந்த உரிமையை நாமும் ஏற் கின்றோம். ஆனால் சமூக வலைத்த ளங்களில் பதிவிடப்படும் போலித் தகவல்களுக்கு பதிலளிக்க வேண்டிய கடப்பாடு எமக்குக் கிடையாது.

தரம் குறைவான மருந்தைக் கொண் டுவந்து மக்களைக் கொன்றவர்கள் எம்மிடம் கேள்வி எழுப்புவதுதான் எமக்குப் பிரச்சினை. தமது கைகளில் குப்பைகளை வைத்துக்கொண்டு அவர்கள் எமது பக்கம் விரல் நீட்டு கின்றனர். தேசிய மக்கள் சக்தி ஆட்சி மீது மக்களுக்கு முழு நம்பிக்கை உள்ளது. அது எமக்கு போதும்.

அதேவேளை இடம்பெற்றுள்ள தவறு களை நிவர்த்தி செய்து, நாடாளுமன்ற உறுப்பினர்களின் தகவல்களை சரி யாக முழுமையாக உள்ளடக்கும் வரை நாடாளுமன்ற இணையத்த ளத்தை தற்காலிகமாகவேனும் முடக்கி வைக்குமாறு நாடாளுமன்ற செயலாளரிடம் கேட்டுக் கொள்ளுகின் றேன். சேறுபூசும் பிரசாரம் மூலம் ஆட்டம்காண வைக்கக்கூடிய கட்சி தேசிய மக்கள் சக்தி அல்ல என்பதை யும் கூறிவைக்க விரும்புகின்றேன்" - என்றார். (அ-ம-44)

## தங்கத்துக்கு...

நேற்றைய நிலைவரத்தின் அடிப்படை யில் 24 கரட் தங்கத்தின் விலை பவுண் ஒன்றுக்கு 2 லட்சத்து 17 ஆயி ரத்து 750 ரூபாவாகப் பதிவாகியுள்ளது. 22 கரட் தங்கத்தின் விலை பவுண் ஒன்றுக்கு ஒரு லட்சத்து 99 ஆயி ரத்து 650 ரூபாவாகப் பதிவாகியுள் ளது. அவ்வப்போது சில ஏற்ற இறக் கங்களும் பதிவாகின. (அ-ம-இ)

## கால்நடைகள்...

வரவுள்ளது. யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் இது தொடர்பில் தெரி வித்ததாவது:-

"யாழ் மாவட்டத்தில் எலிக்காய்ச்சல் காரணமாக இதுவரை 99 பேர் பாதிக் கப்பட்டுள்ளனர். கடந்த 24 மணிநே ரத்தில் (நேற்றுமுன்தினம் தொடக்கம் நேற்று வரையான) எலிக்காய்ச்சல் தொற்றுடன் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் 9 பேரும், யாழ்ப் பாணம் போதனா மருத்துவமனை யில் 5 பேரும் சேர்க்கப்பட்டுள்ளனர். எலிக்காய்ச்சலைக் கட்டுப்படுத்துவ தற்காக இதுவரை அண்ணளவாக 6 ஆயிரம் பேருக்கு தடுப்பு மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் பாதிக் கப்பட்ட சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் காய்ச்சல் நோயாளர்களை இனங்காண்பதற்காக சுகாதாரப் பணியாளர்கள் வீடுவீடாகச் சென்று ஆய்வுகளை மேற்கொண்டு வருகின் றனர். தொற்று அவதானிக்கப்பட் டுள்ள சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் உள்ள கால்நடைகளில் இந்தக் கிருமித்தொற்று உள்ளதா என்பதை ஆய்வு செய்வதற்காக கொழும்பிலிருந்து தனியான குழு வொன்று யாழ்ப்பாணம் மாவட்டத் துக்கு வருகைதரவுள்ளது" - என்றார். (அ-ம-20-125-26)

## அர்ச்சுனா...

மன்றத் தேர்தல் ஒன்றை எதிர்கொள் வதற்கு குறிப்பிடத்தக்க காலத்துக்கு முன்னர் பதவியில் இருந்து விலகியி ருக்க வேண்டும் என்றும், நாடாளு மன்ற உறுப்பினர் அர்ச்சுனாவின் விடயத்தில் அந்த நியதி பின்பற்றப்பட வில்லை எனவும் மனுதாரர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்த மனுவை விசாரணைக்காக ஏற் றுக்கொண்ட நீதிமன்றம், மனு மீதான விசாரணைகள் ஜனவரி மாதம் 15 ஆம் திகதி இடம்பெறவுள்ளதாக அறி வித்துள்ளது. (அ-ம-இ)

## வேட்பாளர்கள்...

சுயேச்சைக் குழுத் தலைவர்கள் மற் றும் தேசியப் பட்டியல் வேட்பாளர்க ளின் செலவு அறிக்கைகளை வழங் குமாறு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்திருந்தது.

எனினும், கட்சிகளைப்பிரதிநிதித்துவம் செய்யும் 8 ஆயிரத்து 361 வேட்பாளர் களில் 7 ஆயிரத்து 412 வேட்பாளர் களே கணக்கறிக்கைகளைச் சமர்ப் பித்துள்ளனர். ஏனைய 949 வேட்பா ளர்களும் கணக்கறிக்கையைச் சமர்ப்பிக்கவில்லை. அத்துடன், சுயேச்சைக் குழுக்களில் போட்டியிட்ட 690 வேட்பாளர்களில் 493 பேர் கணக்கறிக்கையைச் சமர்ப்பித்துள்ள னர். ஏனைய 197 வேட்பாளர்களும் கணக்கறிக்கையைச் சமர்ப்பிக்க வில்லை.

இதேவேளை - 527 தேசியப் பட்டியல் வேட்பாளர்களில் 434 பேர் தங்களது கணக்கறிக்கையைச் சமர்ப்பித்துள்ள னர். ஏனைய 93 வேட்பாளர்களும் கணக்கறிக்கையைச் சமர்ப்பிக்க வில்லை. இவ்வாறு கணக்கறிக்கை யைச் சமர்ப்பிக்காத வேட்பாளர்க ளுக்கு எதிராகவே, நடவடிக்கை எடுக் கப்படும் என்று தேர்தல்கள் ஆணைக் குழு அறிவித்துள்ளது. (அ-ம-இ)

## தனியார்...

தனியார் கல்வி நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பாக யாழ். மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபனுக்கும், யாழ். மாவட்டத்தின் தனியார் கல்வி நிறுவனங்களின் உரி மையாளர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்றுச் செவ் வாய்க்கிழமை காலை யாழ். மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் மாவட் டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீ பன் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலின்போதே, ஒன்பதாம் தரத்துக்கு உட்பட்ட தனி யார் கல்வி வகுப்புகளை வெள்ளிக்கி ழமை பிற்பகல் வேளைகளிலும், ஞாயிற்றுக்கிழமை முழு நேரமும் நிறுத்துவதெனத் தீர்மானிக்கப்பட் டுள்ளது. பிரதேச செயலாளர்கள் தமது உத்தியோகத்தர்கள் ஊடாக மேற்படி விடயத்தினைக் கண்கா ணித்து அறிக்கையிடுதல் வேண்டு மெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியார் கல்வி நிலைய வாசலில் பெற்றோர் காத்திருப்பதனால் பெரிய ளவில் போக்குவரத்து நெருக்கடி ஏற் படுவதாக முறைப்பாடுகளில் தெரி விக்கப்பட்டுள்ளது. தனியார் கல்வி நிலைய உரிமையாளர்கள் அல்லது நிர்வாகிகள் இதற்கான சரியான பொறிமுறையினை மேற்கொண்டு போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்ப டுத்த வேண்டும். இந்தப் பொறிமுறை யினைத் தாமாக நடைமுறைப்படுத் தத்தவறும் தனியார் கல்வி நிறுவனங் கள் தொடர்பில் பொலிஸாரின் உதவி பெற்றுக் கொள்ளப்படும் எனவும் தீர் மானிக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலாளர்கள் 2025ஆம் ஆண்டு ஜனவரி மாத இறுதிக்குள் தமது பிரதேசங்களில் இயங்கும் தனி யார் கல்வி நிறுவனங்கள் மற்றும் குழு வகுப்புகள் தொடர்பில் அனைவ ருடனும் கலந்துரையாடல் மேற் கொள்ளவேண்டும் எனவும் அறிவு றுத்தப்பட்டுள்ளது. (அ-ம-66-26)

## கடைத்தொகுதி...

கடைத்தொகுதிகளில் வர்த்தகத்தை முன்னெடுத்து வந்தோம். நாட்டில் ஏற்பட்ட போர் காரணமாக, கடைத் தொகுதிகள் அழிவடைந்ததுடன் எமது வாழ்வாதாரமும் பறிக்கப்பட் டது. எனவே, கடைத்தொகுதிகளைப் புதிதாக அமைக்க ஆரம்பிக்கும் போது, அங்கு ஏற்கனவே வர்த்தகத் தில் ஈடுபட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்று எமக்குத் தெரி விக்கப்பட்டது. ஆனால், தற்போது எம்மிடம் வழங்கப்பட்ட வாக்குறுதி களுக்கு முரணாகவே, இந்தக் கேள்வி கோரல்கள் மேற்கொள்ளப்பட்டுள் ளன' என்று போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் குற்றஞ்சாட்டினார்கள்.

'ஏனைய உள்ளூராட்சி மன்றங்கள், கேள்வி கோரல்களை மேற்கொள் ளும்போது தமது எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கே முன்னுரிமை வழங்குகின்றன. அதுவே, நடைமுறையாக இருக்கின் றபோது, சாவகச்சேரி நகரசபை மட் டும், வெளிமாவட்டத்தவர்கள் இலகு வாக குத்தகைகளைப் பெறும் வகை யில் இந்தக் கேள்வி கோரலை மேற் கொண்டுள்ளது' என்றும் போராட்டத் தில் ஈடுபட்டவர்கள் மேலும் தெரிவித் துள்ளனர்.

எனினும், இந்தக் குற்றச்சாட்டுகளை மறுத்த நகரசபைச் செயலாளர், 'நகர சபை முடிவுகளின் படியும், சட்டதிட்டத் தின் படியும் இந்த நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது. உள்ளூர் மக் களை நாம் புறக்கணிக்கவில்லை. அவர்களுக்கும் முன்னுரிமை வழங் கப்பட்டுள்ளது' என்று அவர் போராட் டத்தில் ஈடுபட்டவர்களிடம் தெரிவித் தார்.

எனினும், போராட்டத்தில் ஈடுபட்டவர் கள் நகரசபைச் செயலாளரின் கருத் துகளை ஏற்க மறுத்துப் போராட்டத் தில் ஈடுபட்டனர். இதையடுத்து, போராட்டத்தை ஒருங்கிணைத்த சாவ கச்சேரி நகரசபையின் முன்னாள் உறுப்பினர் கிஷோர் கைது செய்யப் பட்டார். பின்னர் அவருக்குப் பொலிஸ் பிணை வழங்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் வடமாகாண ஆளுநரின் கவனத்துக்கும் கொண் டுசெல்லப்பட்டது. இதைத் தொடர்ந்து, பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரால் கேள்வி திறப்ப தைத் தவிர்க்குமாறு நகரசபை செய லாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டதை தொடர்ந்து போராட்டம் கைவிடப்பட் டது. (அ-ம-28-20-131-9-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கையை காப்பாற்றுவோம்

கொழும்பு, டிசெ. 18

தேர்தலின்போது நாட்டுமக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றியே தீருவோம் என அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலின்போதும், நாடாளுமன்றத் தேர்தலின் போதும் நாம் வழங்கிய வாக்குறுதிகளைக் கட்டாயம் நிறைவேற்றுவோம். மாற்றத்தை விரும்பிய மக்கள், எம்மை நம்பி வாக்களித்துள்ளார்கள். எனவே, மக்களின் ஆணையை ஒரு போதும் உதாசீனம் செய்யமாட்டோம் என்றும் குறிப்பிட்டார். (ச-இ)

**கடை வாடகைக்குத் தேவை**

யாழ் நகரை அண்மித்த பகுதியில் உணவகம் நடாத்துவதற்கு ஏற்ற கடை வாடகைக்குத் தேவை.

தொடர்புகளுக்கு:
**077 309 0868**

(23 2468) P-1


**பெண் உதவியாளர் தேவை**

நல்லூரில் அமைந்துள்ள பல்சிகிச்சை நிலையம் ஒன்றிற்கு பெண் உதவியாளர் தேவை.

- வயதெல்லை :- 25 - 30 வரை
- கல்வித் தகைமை:- A/L சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
- சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்

தொடர்புகளுக்கு:- **076 789 8983**

(CS/56952) J-1



# புகையிரதத்துடன் மோதி இரண்டு பசுக்கள் சாவு

யாழ்ப்பாணம், டிசெ.18

கொழும்பிலிருந்து யாழ். நோக்கி வந்த புகையிரதத்துடன் மோதி இரண்டு பசு மாடுகள் உயிரிழந்துள்ளன.

இந்தச் சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை மீசாலை புத்தூர்ச் சந்தியில் உள்ள கமநல சேவைகள் நிலையத்துக்கு முன்பாக இடம் பெற்றுள்ளது.

இதன்போது மாடு தூக்கி வீசப்பட்டதால் அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் சிறிய சேதமடைந்ததுடன் அருகில் நின்றிருந்த 85 வயது மதிக்கத்தக்க முதியவர் ஒருவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ச-159)

## தரமற்ற தானியங்கள்

# களஞ்சியசாலைக்கு வவுனியாவில் 'சீல்'

யாழ்ப்பாணம், டிசெ.18

விவசாய உற்பத்திகள் மற்றும் உள்ளீடுகளை விற்பனை செய்துவரும் தனியார் நிறுவன களஞ்சியசாலை ஒன்றுக்கு நுகர்வோர் அதிகாரசபை உத்தியோகத்தர்களால் நேற்று சீல் வைக்கப்பட்டது.

குறித்த நிறுவனத்தில் தரமற்ற தானியங்கள் உள்ளதாக இராணுவ புலனாய்வுப் பிரிவினரால் வவுனியா மாவட்ட நுகர்வோர் அதிகாரசபைக்கு கிடைத்த தகவலுக்கமைய வவுனியா ஈரப்பெரியகுளம் பகுதியில் உள்ள குறித்த களஞ்சியசாலையில் அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டது.

இதன்போது தரமற்றவகையில் காணப்பட்ட பச்சைப்பயறு ஒரு தொகை மீட்கப்பட்டதுடன் இறக்குமதி செய்யப்பட்டு களஞ்சியப்படுத்தப் பட்டிருந்த திரவப்பசளை ஒரு தொகுதியும் கண்டுபிடிக்கப்பட்டது.

அவற்றின் தரம் தொடர்பாக ஆராய்வதற்காக மாதிரிகள் பெறப்பட்டுள்ளதுடன் பரிசோதனைகள் முடிவடையும் வரை அவற்றை விற்பனைசெய்யவேண்டாம் என்று அதிகாரிகளால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டதுடன் குறித்த களஞ்சியசாலைக்கு சீல் வைத்தும் மூடப்பட்டது. (ச-110)

**யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்**
**இன்று 13.12.2024 முதல் 31.12.2024 வரை**
**இந்தியன் செலக்ஷனின்**



SPECIAL OFFER
நத்தார் மற்றும் புதுவருட ஜவுளிக் கொண்டாட்டம்

1500/- > 1000/-
3000/- > 2000/-
3500/- > 2500/-
4000/- > 2800/-
6000/- > 4000/-

சாறி Offer விசேட விலைக்கழிவு

நூற்றுக்கணக்கான டிசைன்களில் சாறிகள், சல்வார்கள், சல்வார் துணிகள், லெஹங்கா, டொப், பார்ட்டி புறொக் என ஏராளமான ஆடைத் தெரிவுகள் இம்முறையும்

MEGA SALE

நத்தார், புதுவருடத்தை
இந்தியன் செலக்ஷனுடன் கொண்டாடுங்கள்
காலம் : 13.12.2024 முதல் 31.12.2024 வரை
இடம் : வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.
வாரத்தின் 07 நாட்களும் திறந்திருக்கும்.

(CR/43881) J-1



# யோசிதவுக்கு அழைப்பாணை

கொழும்பு, டிசெ. 18

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் மகன் யோசித ராஜபக்சவை விசாரணையொன்றுக்காக முன்னிலையாகுமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களம் அழைப்பு விடுத்துள்ளது.

மஹிந்த ராஜபக்சவின் இரண்டாம் புதல்வரும், கடற்படை அதிகாரியுமான யோஷித மற்றும் மஹிந்தவின் மெய்ப்பாதுகாவலரான ஓய்வுபெற்ற இராணுவ கேணல் நெவில் வன்னியாராச்சி ஆகியோருக்கு எதிராக பணச்சலவை குற்றச்சாட்டின் கீழ் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இதனடிப்படையில் வாக்குமூலம் பெறுவதற்காக யோசித மற்றும் நெவில் வன்னியாராச்சி ஆகியோருக்கு குற்றப் புலனாய்வுத் திணைக்களம் அழைப்பு விடுத்துள்ளது. (ச-இ)

# குகதாசன்- ஹரி கனடாவில் சந்திப்பு

கொழும்பு, டிசெ. 18

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசனுக்கும் கனேடிய நடுவன் அரசின் பழங்குடிமக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரிக்கு மிடையில் விசேட சந்திப்பொன்று கனடாவில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பில் இலங்கைத் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பட்ட சிக்கல்களைப் பற்றி கலந்துரையாடியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# இஸ்ரேல் கவிதையுடன் அம்பாறையில் ஒருவர் கைது

கொழும்பு, டிசெ. 18

இஸ்ரேல் நாட்டுக்கு எதிரான கருத்துகள் அடங்கிய கவிதைகளை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஏறாவூர் பொலிஸார் நபரொருவரைக் கைது செய்துள்ளனர்.

கைதான சந்தேகநபரிடம் தற்போது விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், விசாரணையின் பின்னர் அவர் விடுவிக்கப்படுவார் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (ச-இ)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.12. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org